# 5ந்தும் 3ன்றும்

ஒரு கருத்தியல் பதிவு





-கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா-

SLTES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கரிகாலன் – சகானா

இருமனம்

ஒருமனமாய்

இணையும் நன்நாள்

சமர்ப்பணம்

24.05.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# என்னுரை

இந்நூலில் தமிழ் தொடர்பு ஊடகங்களில் சாதனங்களில் அரசியல் வாதிகளாலும் அறிஞர் பொதுமக்களும் எனது மாணவர்களாலும் அதிகம் வாசிக்கப்பட்டு பாராட்டப்பட்ட பதிவுகள் எட்டு இடம் பெற்றுள்ளன. சமகால அரசியல் பதிவுகளாக ஐந்து நேர்காணல்களும் மூன்று நினைவுப் பேருரைகளும் பலரது வேண்டுகோளுக்குகேற்ப இன்நூலில் இடம் பிடித்துள்ளன.

வீரகேசரி, தினக்குரல் போன்ற தேசிய பத்திரிகைகளிலும் சபீட்சம், தமிழ்வின், பட்டிநியூஸ் முதலான சமூக வலைத்தளங்களிலும் பிரசுரிக்கப்பட்ட எனது பல்வேறு ஆக்கங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்டவை இவை என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 70 ஆண்டுகால சுதந்திர இலங்கை வரலாற்றில் கலையும், பண்பாடும், மொழியும், அரசியலும், அபிவிருத்தியும் இத்தீவின் மக்களுக்கு பகிரப்பட்ட முறைமையும் அதன் ஏற்றத் தாழ்வுகளும் பாராபட்சங்களும், ஒடுக்குமுறைகளும், உரிமைக்குரல் அது மௌனிக்கப்பட்ட முறைமைகளும் நாம் அனுபவித்தவை எமது கலையையும், பண்பாட்டையும், உரிமையையும் பேணும் சக்தியாக அரசியல் பலமுள்ள சாதனராக நாம் வளர்ச்சியடைய வேண்டிய தேவையும் கருதி, அத்தகையை சூழலில் மக்களின் குரல் சார்பாக காணப்பட்ட நேர்காணல் கருத்துக்களும், நினைவுரைகளும் காலத்தின் தேவையில் எனது கருத்தியல் நிலைப்பாடாக முகிழ்த்துள்ளன. இச்செல்நெறி வழிப்பட்ட இக்கருத்திடல்கள் எமது நெருக்கப்படும் குரல்வளைகளைத் தகர்க்கும் சிந்தனைக்கு ஒரு துளியாவது துணைபுரியுமாக இருந்தால் அதுவே எனது சிந்தனைக்கும், எண்ணங்களுக்கும், கருத்து வெளிப்பாட்டுக்கும் கிடைத்த வெற்றி எனக்கருதுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலின் பொருள் தொகுப்பு தொடர்பாக இதற்கு 5ந்தும் 3ன்றும் என மகிடமிட்டுள்ளேன். எமது இலட்சியங்களும், செயல்களும், எண்ணங்களும், எம்மை ஒருமுறை வீழ்தினாலும் எமது கருத்துக்களால் நாம் மீண்டும் எழுந்து நிற்போம்.

வீழ்தல் என்பது எழுதலின் முதற்படியே மானிடமும் சுடரும் வெல்லட்டும்.

இப்பதிவுக்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கி அயராதுழைத்த மொழி கெமினிக்கேஷன் நிறுவனத்துக்கு நன்றி.

இப்படைப்புக்கு அணிந்துரை நல்கிய கிழக்குப்பல்கலைகழக மேல்நாள் மொழித்துறைத்தலைவர் மதிப்பிற்குரிய பேராசிரியர் செ.யோகராசா அவர்களுக்கும் எனது மனமுவர்ந்த நன்றிகள்.

மேலும் எனது ஊடகத்துறை சார் நண்பர்கள் சகோதரர்களுக்கும் நன்றிகள்.

கலாநிதி.எம்.பி.ரவிச்சந்திரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அணிந்துரை

உங்கள் கரங்களில் தவழ்கின்ற வித்தியாசமான இந்நூலிற்கு அணிந்துரை எழுத முற்படுவது மனநிறைவளிக்கின்றது காரணம், பொரும்பாலும் அரசியல் சார்பான விடயங்களையே பேசுகின்ற இந்நூலின் செந்தக்காரரான கலாநிதி. எம்.பி.ரவிச்சந்திரா தமிழ், நாடகமும் அரங்கியலும், கல்வியியல் சார்ந்த துறைகளிலேயே உயர்கல்வித் தகமைபெற்றிருப்பவர். அதாவது அரசியல் இவர் சார்ந்த துறையன்று. அத்துறைசார்ந்து உயர் கல்வி நிறுவனங்களில் கடமை ஆற்றுவோரே இதுபற்றி பேசுவது அரிது. இந்நிலையில் அத்துறைசாராதவர் இலங்கை அரசியல் பிரச்சினை பற்றி எல்லோரும் சிந்திக்கவேண்டிய, எல்லோரதும். சிந்தனையைத் தூண்டுகின்ற அடிப்படை விடயங்கள் பலவற்றையும் பேசி இருக்கிறார். என்பது நிச்சயம் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இந்நூலில் உள்ள எட்டு ஆக்கங்களில் ஏழு ஆக்கங்கள் முற்குறிப்பிட்டது போன்று இலங்கை அரசியல் பற்றி பேசுபவை.

முதலாக்கம் இலங்கையின் இனமுரண்பாட்டுத் தீர்வாக முன்வைக்கப்பட்டு வந்த "சமஷ்டி" என்பது இன்று பெரும் பாண்மையோரால் வெறுக்கப்பட்டு வருகின்ற நிலையில் அதற்குப் பதிலாக அதே தரத்திலான அதிகாரப் பகிர்வு என்பது பொருத்தமானதும் சாத்தியமானதுமான தீர்வு என்பதை தெளிவுபடமுன்வைக்கிறது. மூன்றாவது ஆக்கம் புதிய அரசியல் அமைப்பு பற்றியும், ஐந்தாவது ஆக்கம் அரசியல் தீர்வு தொடர்பான இலங்கை அரசின் செயற்பாடுகள் பற்றியும், ஆறாவது ஆக்கம் நடக்கவுள்ள உள்ளூராட்சி தேர்தல் செயற்பாடுகள் பற்றியும் விமர்சிப்பனவாக அமைந்து வாசகரை சிந்திக்கத் தூண்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாவது ஆக்கம் மிக அண்மையில் நிகழ்ந்த மனிதப் படுகொலை பற்றியும் அந்த அடிப்படையில் மதங்களுக்கு இடையிலான நல்லியல்புகள் பேணப்படாமை பற்றியும் இதற்கான சாத்தியமான தீர்வாக அன்பும், மனிதமும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்பது பற்றியும் எடுத்துரைக்கின்றது.

இரண்டாவது கட்டுரை உலகப்புகழ் பெற்ற இலங்கை அரசியல் ஆய்வாளரான சிவராமின் நினைவுப் பேருரையாக அமைந்து, ஊடகங்கள் எவ்வாறு அமையவேண்டும், ஊடகவியலாளர்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றியும் விவரித்து இன்றைய அரசியல் தலைமைகள் பற்றி சிவராம் வெளியிட்ட ஆய்வுக் கருத்துக்களை தெளிவாக முன்வைக்கிறது.

நாலாவது ஆக்கம் மற்றுமொரு முக்கியமான ஊடகவியலாளரான நெல்லை நடேசனின் படுகொலை பற்றியும் அவரது அரசியல் சார்ந்த நடவடிக்கை பற்றியும் பேசமுற்படுகின்றது. ஏழாவது ஆக்கம் மட்டும் தமிழ் கூத்துக்கலை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி ஆழமான சிந்தனைக்குரிய கருத்துக்களை முன்வைக்கிறது.

எனவே இன்னொரு விதத்திலும் இந்நூலாசிரியர் பாராட்டுக்குரியவர் என்று கருதுகின்றேன். எந்த ஒரு உயர்கல்வி நிறுவனமும் தனது சமூகத்துடன் ஏதோவொரு விதத்தில் தொடர்புகளைப் பேணவேண்டியது அவசியமாகும். எனினும் தமிழருக்குரிய உயர்கல்வி நிறுவனங்கள் பலவும் அதனை விரும்புவதில்லை. அங்கு கற்பிப்பவர்கள் தமது தொழில் சார்ந்த கடமையிலேயே கண்ணும் கருத்துமாய்(!) இருக்கின்றனர் மாறாக, இந்நூலின் ஆசிரியர் அத்தகையவர் அல்லர் என்பது இவ்வாக்கங்கள் மேடைப் பேச்சுக்கலாகவும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நேரகாணல், கலந்துரையாடல் என்ற விதங்களிலும் வெளிப்பட்டிருப்பதில் இருந்து புலனாகின்றது.

வருங்காலங்களில் அரசியல் துறைசார்ந்த விடயங்களில் மட்டுமின்றி சுற்றுக் சூழலியல், உயிர்கொல்லி நோய்களில் இருந்து மீளல், நடைமுறைக்கல்வி சார் விடயங்கள், ஏழை மக்களைவாட்டும் ஏழைமக்கள் மத்தியில் நிறைந்துள்ள தற்கொலை சம்பவங்கள், இன்றை இளைஞர்களது நடத்தைக்கோளங்கள் தொடர்பான விடயங்களிலும் இந்நூலாசியர் கவனம் செலுத்தி தமிழ் சமூகத்தினர் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பது என்போன்றோரது வேணாவாகும்.

வாழ்துக்களுடன்

பேராசியர் செ.யோகராசா,
மேல்நாள் மொழித்துறைத் தலைவர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.
2019.05.15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தமிழருக்கு சமஷ்டி என்ற பதத்தில் அல்ல தரத்திலான அதிகாரப்பகிர்வே வேண்டும் | 09 |
| 2. | சிவராமின் பார்வையில்... எமது ஊடகமும், அரசியலும். நிரப்பவேண்டிய இடைவெளி. | 14 |
| 3. | கிள்ளியும் கொடுக்காமல் அள்ளிக் கொடுப்பதுபோல் புதிய அரசியலமைப்பு | 22 |
| 4. | ஊடகவியலாளர் நடேசனின் படுகொலை நியாயப்படுத்த முடியாத ஒன்று | 26 |
| 5. | அரசியல் மாற்றம் சிறுபான்மையினரையும் சர்வதேசத்தைதையும் ஏமாற்றும் மற்றுமொரு அரசியல் நாடகமா? | 29 |
| 6. | மக்கள் தங்களுடைய இருப்புக்களிலும் கொள்கைகளிலுமிருந்து மாறவில்லை | 33 |
| 7. | தமிழ்க் கூத்துக்கலையை எவ்வாறு தொழில்முறைக் கலையாக்குவது? | 40 |
| 8. | மனிதம் மானுடத்தை மதிக்கட்டும் | 44 |




Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# தமிழருக்கு சமஷ்டி என்ற பதத்தில் அல்ல தரத்திலான அதிகாரப்பகிர்வே வேண்டும்

–கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா.–

இலங்கையர் என்ற உணர்வு மேலோங்க வேண்டுமாக இருந்தால் இன்றைய நல்லாட்சியாளர்கள் பிளவு படாத ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி என்ற பதத்தில் அல்ல சமஷ்டி என்ற தரத்திலான அதிகாரப் பகிர்வை முன்வைக்க வேண்டும். என்று மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா தெரிவித்தார்.

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் இதயசுத்தியுடன் உண்மையான சுதந்திரத்தை கட்டியெழுப்புவோம் என்ற தொனிப்பொருளில் வியாழக்கிழமை நடைபெற்ற 68 ஆவது சுதந்திரதின நிகழ்வில் சிறப்புரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்

சாதி, இனம், மதம், பிரதேச பேதமற்ற ஒன்றுபட்ட இலங்கையர் என்ற உணர்வுள்ள தேசத்தை நாம் வெறும் வார்த்தைகளால் கட்டியெழுப்ப முடியாது. அதை நாம் அடையப்பெறுவதாக இருந்தால் எல்லோரும் இந்த நாட்டின் மக்கள் என்ற வகையில் இதய சுத்தியுடன் நியாயமான உணர்வு மிக்க விட்டுக்கொடுப்புகளை பரஸ்பர புரிந்துணர்வுடன் செய்ய வேண்டும்.

எம்மை நாம் தமிழன் என்று சொல்வதாலோ, முஸ்லிம் என்று சொல்வதாலோ, சிங்களவன் என்று சொல்வதாலோ நாம் அடைகின்ற உணர்வு பூர்வமான மகிழ்ச்சியை விட நாம் இலங்கையர் என்று சொல்வதால் மிகுந்த பெருமிதம் அடைகின்றோம். நாம் எத்தேசத்திற்குச் சென்றாலும் எம்மை இலங்கையர் என்றே அழைக்கின்றனர் மாறாக எங்கள் இனங்களின் பெயரால் எவரும் உடனடியாக அழைப்பதில்லை.

நாம் இன்று முக்கியமாதொரு காலகட்டத்திலே, முக்கியமானதொரு இடத்திலே முக்கியமானதொரு நிகழ்விலே ஒன்றுகூடியிருக்கின்றோம். அந்திய காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுதலை பெற்ற தேசத்தின் 68 வது தேசிய விடுதலை தின நிகழ்வினை இன்று நினைவு கூர்ந்து கொண்டாடிக்கொண்டிருக்கின்றோம். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைபவம் உண்மையில் இதயசுத்தியுடன் கொண்டாடப்படுகின்றதா? என்ற கேள்வி எம் மக்கள் மத்தியில் உள்ளது. உண்மையில் சுகந்திரம் என்பது வெறும் எழுத்திலும், வாய் வார்த்தைகளிலும் இருப்பதை விடநடைமுறைச் சாத்தியப்பாட்டுடன் எவ்வளவு தூரம் உள்ளது என்ற கேள்வி ஆதங்கம், சிறுபான்மைச்சமூகத்திடம் நிறையவே உள்ளது.

இன்றைக்கு 68 ஆண்டுகளாக தமிழ்பேசும் மக்கள் தம்மைத்தானே நிர்வகிக்கக்கூடிய அதிகாரங்களைக் கேட்டு அகிம்சை ரீதியிலும், கடந்த 30 வருடங்களுக்கு மேலாக ஆயுதம் ஏந்தியும் போராடினர்.

உண்மையிலே இந்நாட்டில் இனபேதம், மதபேதம், இல்லாதிருந்திருந்தால் இந்நாடு இத்தகையதொரு இழிநிலைக்குச் சென்றிக்காது. எமது தாய்நாட்டின் மானத்தை தேசப்பற்றாளர் என்ற போர்வையில் எமது குறுகிய இனவாத அரசியல் நடவடிக்கைகளுக்காக, அற்ப சுயநலத்துக்காக சர்வதேச ரீதியில் அவமானப்படுத்ததுணிந்திருக்க மாட்டார்கள். தாய்நாட்டை நேசிக்கின்ற இலங்கையர்கள் ஒவ்வொருவரும் இந்நாட்டை இதய சுத்தியுடன் உண்மையான சுதந்திரத்தை பல்லின சமூகம் வாழும் நாட்டில் கட்டியெழுப்பவே உழைத்திருப்பவர் அதற்காகவே அர்ப்பணித்திருப்பர்.

காலச்சக்கரவோட்டத்தில் மகத்தான தலைவர்களைத் தந்த இந்தநாட்டின் தலைவிதி தீர்மானிக்கப்பட்ட முடியாத ஒன்றாக மாறியதற்கு யார் காரணம். பிரித்தானிய காலனித்துவ ஆதிக்கத்தின் பின் கிடைத்த சுதந்திரம் இந்நாட்டின் பெரும்பான்மை சமூகம் தவிர்ந்த ஏனையவர்களுக்குப் பெயரளவாகவே இருந்தது.

காலத்திற்குக் காலம் இனக்கலவரங்களாலும், அரசியல் வன்முறைகளாலும் ஒடுக்கப்பட்ட சிறுபான்மையினர் தமது தலைவிதியைத் தீர்மானிக்கத் தமது இனத்தைப் பாதுகாக்க தாமே போராட வேண்டும் என்ற சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டது. சத்தியாக்கிரகப் போராட்டம், ஹர்த்தால், ஸ்ரீ ஒழிப்புப் போராட்டம் எனப் பல போராட்டங்கள் வேகமாக வளர்ச்சி கண்டன. டட்லி.செல்வா ஒப்பந்தம், பண்டா செல்வா ஒப்பந்தம், ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம், திம்புப் பேச்சுவார்த்தை, இந்திய - இலங்கை ஒப்பந்தம், சந்திரிகா — விடுதலைப்புலிகள் ஒப்பந்தம், ரணில் - பிரபா நோர்வே அனுசரணையுடனான ஒப்பந்தம், 2009.05.17 உடன் ஆயுதப் போராட்டம் மௌனிப்பு, அதன்பின் சர்வதேச ரீதியாக ஏற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நெருக்கடி நிலைமைகள் காரணமாக ஜெனிவாத் தீர்மானம் வரை காலத்திற்குக்காலம் தமிழ்பேசும் இனம் ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்டு வந்துள்ளது. ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டுள்ளன, நிராகரிக்கப்பட்டுள்ளன. அதிகாரங்கள் பறிக்கப்பட்டுள்ளன. 32க்கு மேற்பட்ட பெரும்பான்மை இனவாத அமைப்புக்கள் தமிழ்பேசும் மக்களின் அரசியல் தீர்வு முன்னெடுக்கப்படும் போதெல்லாம் தோற்றம் பெற்று தீர்வு நடவடிக்கைகளை செயலிழக்கச் செய்துள்ளன.

ஆயினும் தமிழ் பேசும் இனத்திற்கு ஓர் நியாயமான தீர்வு வேண்டும் என்று தமிழ் மக்கள் சார்பாக இலங்கைத் தீவில் குரல் கொடுத்த பெரும்பான்மை இனத் தலைவர்கள் கூட இனவாதத்துக்குள் மாண்டுபோயினர். இந்தவகையில் தமிழர் தீர்வைக் கேட்கும் முன்பே எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க இந்நாட்டு மக்களுக்கு சமஷ்டி, முறையில் 1926 இல் தீர்வு காணமுற்பட்டார். இவர் 1956 இல் தனிச்சிங்களச் சட்டத்தை உருவாக்கி முல்படுத்தி இனமுரண்பாட்டிற்கு தீவிர வடிவம் கொடுத்தவர். இவர் 1956ல் இளைஞர் காங்கிரஸ் கூட்டத்தில் உரையாற்றும் போது இலங்கைக்கு சமஷ்டிக் அரசியலமைப்பே பொருத்தமானதென்று முதன் முதலாக சமஷ்டி குரலை ஒலித்தார். அதனைத் தொடர்ந்து கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா இருமொழி, ஒருநாடு என்ற கோசத்தை முன்வைத்தார். சேர்.ஜோன் கொத்தலாவல கூட தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து வழங்க வேண்டும் என 1953இல் நடைபெற்ற ஹர்த்தாலைத் தொடர்ந்து 1954ல் குறிப்பிட்டார்.

இவ்வாறு சிங்களத் தலைவர்கள் தமிழர் பிரச்சினையை நன்கு அறிந்திருந்த சூழலில் தான் 16.08.1956ல் திருமலை யாத்திரை முடிவில் நடைபெற்ற மகாநாட்டில் தந்தை செல்வா சமஷ்டித் தீர்வை முன்வைத்தார். இவையெல்லாம் நிராகரிக்கப்பட்ட சூழலிலேதான் தனிநாட்டுக் கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானம் 1976.05.14 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது.

காலத்திற்குக் காலம் சீர்திருத்தம் 1972 அரசியலமைப்பு சீர்திருத்தம், 1978 சீர்திருத்தம் எனப் பல்வேறு அரசியல் சீர்திருத்தங்கள் வந்த போதும் தமிழர் பிரச்சினைக்கு நிலையான தீர்வுத்திட்டங்களை ஆட்சியில் இருந்தவர்கள் முன்வைக்கவும் இல்லை. கருத்தில் கொள்ளவும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனவாதமும், மதவாதமும், இலங்கைப்பெரும்பான்மை சமூகத்தையும் சிறுபான்மைச் சமூகத்தையும் மேலும் பிளவுபடுத்தின. காலத்திற்குக் காலம் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன. கைவிடப்பட்டன. இத்தகைய சூழலில் இதய சுத்தியுடனான உண்மைச் சுதந்திரத்தை நாம் அனுபவிக்க பரஸ்பர விட்டுக்கொடுப்புகள் அவசியம். இலங்கை சிறுபான்மையினச் சமூகங்கள் நியாயமான முறையில் பல விட்டுக்கொடுப்புகளைச் செய்துள்ளன. பல பாதிப்புகளைச் சந்தித்துள்ளன. எனவே இந் நாட்டில் நல்லாட்சியும் இன, மத ஒருமைப்பாடும் சகோதரத்துவமும் கட்டமைக்கப்படவேண்டுமானால் இலங்கைத் தீவின் இதயத் துடிப்பாக இலங்கை மக்கள் ஒவ்வொருவரினதும் இதயத்துடிப்பு அமைய வேண்டுமானால் நாம் எல்லோரும் இலங்கையர் என்ற உணர்வு மேலோங்க வேண்டுமாக இருந்தால் இன்றைய நல்லாட்சியாளர்கள் பிளவு படாத ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி என்ற பதத்தில் அல்ல சமஷ்டி என்ற தரத்திலான அதிகாரப்பகிர்வை முன் வைக்க வேண்டும்.

இலங்கைச் சிறுபான்மைச் சமூகத்தினரும் தமது பாரம்பாரிய பிரதேசங்களில் தம்மைத் தாமே நிர்வகிக்கின்ற அதிகாரத்தை வழங்கவேண்டும். பாதுகாப்பு, காணி, பொருளாதாரம், விவசாயம், மீன்பிடி, வனவளம், கல்வி, உயர்கல்வி, விளையாட்டு, கலை பண்பாடு, வரையறுக்கப்பட்ட வரிக்கொள்கைகள், பொருளாதார அபிவிருத்தி தொடர்பான வரையறுக்கப்பட்ட வெளியுறவுக் கொள்கைகளுக்கான அதிகாரப்பகிர்வுகள், நியதிச்சட்டங்களை இயற்றுவதற்கான மாநில அளவிலான அதிகாரங்களையும் வழங்கவேண்டும்.

மாநில அளவில் பெரும்பான்மை சமூகமாக வாழுகின்றவர்களுக்கிடையில் உள்ள சிறுபான்மைச் சமூகத்தவர் எவ்வினத்தைச் சேர்ந்தவராக இருப்பினும் அவர்களுக்கான ஆட்சி உபஅலகுகள் வழங்கப்படவேண்டும். ஆளுனர் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்படும் பட்சத்திலேதான் இந்நாட்டின் உண்மைச் சுதந்திரம் இதயபூர்வமாக அனுஸ்டிக்கப்படும். இது எமது நாடு, இது பல்லின சமூகத்தவர்களையும், பல்வேறு மதங்களையும் பின்பற்றும் நாடு எமது நாட்டை சகோதரத்துவதுடனும், சமாதானத்துடனும் நாம் எல்லோரும் இலங்கையர் என்ற இதயசுத்தியுடன் எதிர்கால சுபீட்சம் நிறைந்த நல்லாட்சிமிக்க முன்மாதிரியான தேசத்தைக் கட்டியெழுப்புவோம். அற்காகப்பாடுபடுவோம் என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அரசினர் ஆசிரியர் கலாசாலையின் பிரதி அதிபர்.பி.பரமேஸ்வரன் தலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அதிபர் ஏ.எஸ்.யோகராசா முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டார். அத்துடன், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்களும் கலந்து கொண்டனர்.

நன்றி

தினக்குரல்

பட்டி நியூஸ்

சுபீட்சம்

தமிழ்வின்

2016 பெப்ரவரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவராமின் பார்வையில்... எமது ஊடகமும், அரசியலும். நிரப்பவேண்டிய இடைவெளி.""

-கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா-

தமிழுலகு இதுவரை கண்ட பத்திரிகையாளர்களுள் பெரிய இடத்துக்குரியவராக மதிக்கப்படப் போகும் சிவராமின் மறைவை அவரது பத்திரிகை உலகப் புகழ் அவரது மற்றைய திறமைகளை மறைத்து நிற்கின்றன என்றே கூறவேண்டும். என மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை,விரிவுரையாளர்,கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா வழங்கிய நினைவுப் பேருரையில் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் அமரர் தராகி சிவராம் அவர்களின் 11ஆம் ஆண்டு நினைவேந்தல் அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியமும் கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியமும் இணைந்து நேற்று ஏப்ரல் (30) அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஏற்பாடு செய்த நிகழ்வில், சிவராமின் பார்வையில்... ""எமது ஊடகமும், அரசியலும். நிரப்பவேண்டிய இடைவெளி."" எனும் தலைப்பில் ஆற்றிய நினைவுப் பேருரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,
தமிழர் வரலாறு, இலக்கியம், போரியல் நுணுக்கங்கள் ஆகியவற்றில் சிவராமுக்கு உள்ள புலமை ஆழமும் பரப்பும் பெரும் வியப்புக்குரியவை. இத்துணை அறிவையும், விளக்கத்தையும் பெற்றிருந்த சிவராமின் மிகப்பெரிய சிறப்பு அவற்றை வெளிக்காட்டிக் கொள்ளாமைதான். என அமரர் சிவராமின் மறைறைவையொட்டி கூறிய இரங்கல் செய்தியில் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் தராகி, எஸ்.ஆர். எனப் பல புனை பெயர்களால் அழைக்கப்பட்ட சிவராம் தொடர்பான மதிப்பீடு ஓர் ஊடகவியலாளன் யார் என்பதை அடையாளப்படுத்தி நிற்கின்றது.

உண்மையில் ஒரு பத்திரிகையாளன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு சிவராமின் மொழியிலேயே சிவராமின் கருத்தை இங்கு முன்வைப்பது இச் சந்தர்ப்பத்தில் பொருத்தமானது எனக் கருதலாம். ஒரு பத்திரிகையாளன் எழுதும் ஒவ்வொரு எழுத்தையும் பொறுப்புடன் எழுத வேண்டும். பல்லாயிரக்கணக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மக்களின் அரசியல் சிந்தனையை நெறிப்படுத்தும் வகையில் அவன் செய்தி முறையும் கொடுக்கும் தகவல்களும் அமையவேண்டும்.

ஏனெனில் இது தொடர்பூடகங்களின் காலம், ஆனால், ஒரு பத்திரிகையாளன் பெறுப்புடன் எழுதுவதாயின் அவனுக்குப் பரந்த அறிவும்,இடையறாத்தேடலும், நூல்கள், ஆவணங்கள் ஆகியவற்றைச் சேகரிக்கும் ஆர்வமும் இன்றியமையாதவை. மேலும் தமது கடமையைச் சரிவரச் செய்யவேண்டும் என்பதே என் அவா என சிவராம் இலங்கை இன முரண்பாடுகளின் வரலாறு என்னும் நூலுக்கு வழங்கிய முன்னுரையில் குறிப்பிட்டு இருப்பது தக்க சான்று எனலாம்.

இன்றைய காலகட்டத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சியும், அதன் வளர்ச்சிக்குச் சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கைக்குமுள்ள ஊடாட்டமானது சமூக வாழ்க்கையின் இயங்கு நிலைக்கு பல்வேறு வகையில் தொடர்பூடகங்களை அத்தியாவசியமாக்கியுள்ளது. இவை இன்றைய வாழ்க்கை முறையைப் பாதிப்பனவாக உள்ளன.

அதிலும் பார்க்க மிக முக்கியமான யதார்த்தம். இந்த தொடர்பூடகங்களே நமது வாழ்க்கையை இயலுமானதாக ஆக்குகின்றன.இன்று தொடர்பூடகங்கள் சம்பந்தப்படாத வாழ்க்கை அம்சம் எவையுமேயில்லை எனக் கருதலாம்.

உண்மையில் இந்தத் தொடர்புச் சாதனங்களின் அடித்தளத்தில் இவற்றின் ஜீவசுருதியாக அமைவது மொழியே, உறவுகளை நிலைநிறுத்தி சமூகத்தை வலுவுள்ளதாக்குகின்றது. மிகுந்த அந்தரங்கமான உணர்வுகள் முதல் ஆட்சி அதிகாரத்தின் வெளிப்பாடுகள் வரை சகலதும் மொழிவழியாகவே நிற்கின்றன. ஆள் நிலை ஊடாட்டத்தில் ஆரம்பித்து ஒரு குழுமத்தின் ஊடாட்டத்திற்கு தளமாக அமைகிறது. உறவுநிலைத்தன்மைகளின் பரிமாண வேறுபாடுகள் மொழியின் வெளிப்பாட்டுக் கனதியையும் வேறுபடுத்தத் தொடங்குகிறது. இங்கு பேச்சு, எழுத்து ஆகின்றது.

இது ஒரு சமூக நிர்ப்பந்தமும் கூட, பேச்சுக்கான கேள் மட்டம், அல்லது செவிமடுத்தல் மட்டம் விரிவடைய வேண்டிய நிலையில் எழுத்து பேச்சின் ஏற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்கங்களை, நெளிவு சுழிவுகளை எடுத்துக்காட்ட வேண்டியதாயிற்று. இந்தத் தொடர்புத் தேவைகளே ஊடகங்களையும்,ஊடகவியலாளர்களையும் முக்கியப்படுத்துவதாகவும் முக்கியமானவர்களாகவும் ஆக்குகின்றது எனலாம்.

இவ்வகையில் தொடர்பூடகங்களின் மொழியின் வெளிப்பாடுகள் அவ்வூடகங்களின் தன்மையினாலேயே தீர்மானிக்கப்பட்டன. உற்பத்தி முறைகளும், உற்பத்திப்பரிமாணங்களும், நுகர்வுத் தேவைகளுடனும், நுகர்வு வட்டங்களுடனுமான இணைவு அதன் வளர்ச்சி நிலையைத் தீர்மானித்தன. ஆனால், இன்று வரும் தமிழ் எழுத்துக்கள் யாவும் ஏதோ ஒரு வகையில் தொடர்பூடக எழுத்துக்களே என்பதை எடுத்துக்காட்டும் ஊடகம் மூலம் அல்லாது இன்று எழுத்து வெளிவருவதில்லை. இந்தப் பின்புலத்தில் இன்றைய தொடர்பூடகங்களில் அநேகமானவற்றில் மொழி பயிலப்படும் முறை திருப்தியற்றது.

அச்சுப்பிழை, உச்சரிப்புப்பிழை, கருத்தியல் மயக்கம், பொருள் மயக்கம், தலைப்புக்குப் பொருத்தமான செய்தியிடல் இன்மை, எதற்கு முக்கியத்துவம் அளித்தல் என்பதில் தெளிவின்மை, சமூக நலன் சார்ந்த செயற்பாடுகளில் பக்கச்சார்பைக் கடைப்பிடித்தல் தொடர்பான பிரச்சினைகள்,குறைபாடுகள், ஒத்தூதுதல், இருட்டடிப்புச் செய்தல், ஒருபக்கம் சார்பாகச் செயற்படல், எனப் பல்வேறு சிக்கல் நிலைகள் இன்று ஊடகத்துறையில் மலிந்து காணப்படும் பிரச்சினைகள் ஆகும். இவற்றை நிவர்த்தி செய்ய வேண்டியது ஊடகத்துறைசார்ந்த ஒவ்வொருவரினதும் தார்மீக கடமையாகும்.

ஒரு ஊடகவியலாளனின் தொழில் நேர்மையும் விசுவாசமுமே ஒரு சமுதாயத்தின் ஊன்று கோல் அதனை சரியான முறையில் பயன்படுத்தினால் ஒரு சமுதாயம் அந்த ஊன்றுகோலைப்பிடித்து எழுந்து நிற்கமுடியும். இந்த அரசியலை ஊடகத்துறை செய்ய வேண்டும். ஏனெனில் ஊடகத்துறை என்பது அரசியல் சார்ந்ததாக அவசியம் இருந்தேயாகவேண்டும். ஏனென்றால் மனிதனுடைய அனைத்து நடவடிக்கைகளும் அரசியல் சார்ந்தனவாகவே இருக்கின்றன.

அந்த நடவடிக்கைகளில் ஊடகத்துறையும் ஒன்று. அரசியலில் இருந்து ஊடகத்துறையைப்பிரிக்க முனைவோர் நம்மை ஒரு தவறான பாதையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செலுத்துவதற்கு முயற்சி செய்கின்றனர். ஊடகத்துறை என்பது ஓர் ஆயுதம். மிகவும் சக்திவாய்ந்த ஆயுதம் இந்த ஒரு காரணத்துக்காகவே ஒருவர் பேனா முனையில் போரிட வேண்டும் என்ற உணர்வுடன் செயற்பட்ட ஒரு ஊடனச் செயற்பாட்டாளன் சிவராம். ஆவ்வாறே தான் சார்ந்த ஊடகத்துறையினரும் தங்கள் சமூகத்திற்காக குரல் கொடுக்க வேண்டும் என முழங்கியவன்.

உண்மையில் ஊடகத்துறை ஒரு சக்திவாய்ந்த ஆயுதம் என்பதனாலேயே ஆளும் வர்க்கம், அதனைத் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து அதனைத் தம் ஆதிக்கத்திற்கான கருவியாகப் பயன்படுத்திடவும் முயன்று வருகிறது. இம் முயற்சியில் ஈடுபடும் ஆளும் வர்க்கத்தின் ஊடகத்துறை என்பதன் கருத்தாக்கத்தைத் (Concept) திரிக்கவும் செய்கின்றனர். ஆனால் ஊடகத்துறை என்பது மக்கள் விடுதலைக்கான ஓர் ஆயுதமாகும். அந்த ஆயுதத்தை ஊடகவியலாளரர் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் அப்போது சரியான பாதையில் வழிப்படுத்த முடியும்.

ஏனெனில், உணர்ச்சியும், அனுபவமும், மனிதனது இதயத்திற்கு நெருங்கியவை. அரசியல் கருத்துக்களோ யாவருக்கும் பொதுவானவை. வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்பு உடையனவல்ல என்று சிலர் கருதக்கூடும். ஆனால் அத்தகைய கருத்துச் சரியானதா என்று ஒரு சிறிது சிந்தித்துப்பார்த்தல் தகும். நமது காலத்தில் அரசியல் கருத்துக்களும், சித்தாந்தங்களும் எத்தனையோ மனித உள்ளங்களிலே ஆழ்ந்த உணர்ச்சியைக் கிளறிவிடவல்லனவாயுள்ளன. எத்தனையோ மக்களின் மனங்களில் குணங்களை நிச்சயிப்பனவாயிருக்கின்றன. எனவே நேர்மையோடு சமுதாயத்தைப் பற்றிச் சிந்திக்கும் எந்த ஓர் எழுத்தாளனும் அரசியல் சிந்தனைகளைப் புறக்கணிக்க முடியாது என்ற கருத்தாக்கத்தில் சிவராம் மிகத் தெளிவுடன் செயற்பட்டவர்.

இதனால் தான் தமிழர் அரசியலில் இன்று நிலவும் பல குறுபடிகளுக்கு எமது வரலாற்றைப் பற்றிய தெளிவின்மையும், அறிவின்மையும் முதன்மைக் காரணங்களாகும் எனக் கூறினார். இலங்கையின் சிங்களப் பெரும்பான்மை அரசுகள் காலத்திற்குக்காலம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என்கிற பேரில் கிளப்பிவிடும். புரளிகளும் அவற்றைப் புதுமையாகத் தமிழ் மக்களுக்குக் காட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்படுபவர்களின் நாடகங்களும் எமது அரசியல் வரலாறு பற்றிய அறியாமையாலேயே சாத்தியமாகின்றது.

ஏனென்றால் எவருக்குமே வரலாறு தெரியாது அல்லது வரலாற்றை அறிந்தவர்கள் வாய்மூடியிருப்பார்கள் என்ற முட்டாள்தனமாக வீறாப்பில்தான் இன்று தமிழ் மக்களின் தலைகளில் அரசியற்குப்பைகளைக் கொட்டிக் கொண்டிருக்கின்றனர் பல தலைவர்கள்.

அவர்கள் இங்கனம் செய்வதைத் தட்டிக்கேட்க ஆளில்லாமல் இருப்பதற்கு இன்னொரு முக்கிய காரணமும் உண்டு. இன்று 18லிருந்து 30 வயது வரையுள்ள தமிழ் ஆண்களையும், பெண்களையும் எடுத்துக்கொண்டால், எமது விடுதலைப் போராட்டம் கூர்மை அடைந்து ஆயுதப்போராட்டமாக முனைப்புப் பெற்ற 1970இல் இருந்து 1983 வரையான காலகட்டத்தில் ஒன்று அவர்கள் பிறந்து இருக்கமாட்டார்கள். அல்லது அரசியல் பிரக்ஞை பெறும் வயதை எட்டியிருக்க மாட்டார்கள்.

எனவே தமிழ் அரசியலின் எதிர்காலப் போக்கினைத் தீர்மானிக்கின்ற அடிப்படைக் கூட்டமாகவுள்ள இவர்கள் மீது எந்த வரலாற்றுக் குழறுபடியையும் திணித்து தமது அப்பட்டமான சந்தர்ப்பவாத அரசியலைக் கொண்டு நடத்தக்கூடிய சூழ்நிலையை எமது அரசியல்வாதிகள் இன்று அனுபவிக்கிறார்கள் என சிவராம் எழுதியிருப்பதும் தமிழரின் அரசியல் வரலாற்றைக் குறிப்பாக இனப்பிரச்சினை சூழ்கொள்ளத் தொடங்கிய 50களில் இருந்து தெளிவாக யாரும் அறிந்துகொள்ள முடியாமைக்கு முக்கியமான நான்கு காரணங்களை இலங்கையின் இனமுரண்பாடுகளின் வரலாறு என்னும் நூலின் முன்னுரையில் முன்வைக்கின்றார் சிவராம். அக்கருத்தினை இங்கு தொகுத்துத் தருவது பொருத்தமானது எனக் கருதலாம்.

1. பல்கலைக்கழகம் சார் தமிழ் அரசியற்துறைப் பேராசிரியர்களின் ஆர்வமின்மை.

2. அரசியல் ஆவணங்கள் செய்தித்தாள்கள் போன்றவற்றை ஒரு தமிழ் ஆய்வாளன் இலகுவாகப் பொற்றுக் கொள்ள முடியாத தடங்கல்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

3. 50களுக்குப் பிற்பட்ட தமிழரின் அரசியல் வரலாற்றோடு பின்னிப்பிணைந்தவர்களும், அதன் முக்கிய பாத்திரங்களாக இருந்தவர்களும் தத்தமது இன்றைய அரசியல் நலன்களையும், நம்பிக்கைகளையும், கருத்துக்களையும், முதன்மைப்படுத்தி அவற்றுக்கேற்ற வகையில் தாம் கடந்து வந்த பாதையின் சில அத்தியாயங்களை மறைப்பதும், திரிபுபடுத்துவதும் வரலாற்றைச் சரியான முறையில் பதிவதற்கு இன்னொரு தடைக்கல்லாக உள்ளது. (இது நீக்க முடியாத சாபக்கேடல்ல எனக்குறிப்பிட்டு இருப்பதும்)

4. ஆயுதப் போராட்டம் தவிர்ந்த தமிழரின் அரசியற் பிரச்சினை பற்றிய ஓரளவு முழுமையான சீராகவும், நுட்பமாகவும் விரிவாகவும் ஆராய்ந்து தெளிவாக எழுதப்பட்ட வரலாறு என்று சொல்லக்கூடிய நூலாக அண்மையில் மறைந்த பேராசிரியர் ஏ.ஜே.வில்சனின் ஹஹஹஸ்ரீலங்காவின் உடைவுஹஹ ( The Breakup Of Srilanka) கொள்ளப்படுகிறது. இது ஒருவகையில் உண்மையெனினும் தமிழ் அறிவற்ற அல்லது அரைகுறையாகத் தெரிந்த மேட்டுக்குடித் தமிழ் அரசியற் தலைமைகளுக்கும், சிங்கள அரசுகளுக்குமிடையில் நடைபெற்ற உயர் மட்டப் பேரம் பேசல்கள் இழுபறிகள், சட்டச் சிக்கல்கள், என்பவற்றை அடிப்படையாகக் கொண்டவையாக இருந்தாலும் தமிழர் அரசியல் பிரச்சினை பற்றி ஆங்கிலத்தில் எழுதப்பட்ட சில ஆய்வுக்கட்டுரைகளும் அமைந்துள்ளன.

தமிழ் அரசியலில் உந்து சக்தியாகவிருந்த தமிழ் மொழிக்கல்வி வழிவந்த இளைஞர்களும் தேசிய உணர்வால் உந்தப்பெற்ற தமிழ் மக்களும் என்ன செய்தார்கள். என்ன பேசினார்கள், என்ன எழுதினார்கள் என்பதைப்பற்றியெல்லாம் இந் நூலிலோ தமிழ் அரசியல் பற்றி வந்துள்ள சில ஆங்கியலக்கட்டுரைகளிலோ நாமறிந்து கொள்ள முடியாது எனக்கருதியதும்,

தமிழ் ஊடகத்துறையை நவீன தொடர்பு சாதன வளர்ச்சியோடு ஆற்றுப்படுத்தியும், விடுதலைப் போராட்டத்திற்கு உரமூட்டியும், பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பணியாற்றிய முழுமையான தமிழர் அரசியல் வரலாறு எழுதப்படுவதற்கும் நாம் அரசியல் அறிவு பெற்று நமது இன உரிமைப் போராட்டப்பாதையில் தெளிந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையுடன் முன்னேறிச் செல்ல வேண்டுமென வழி காட்டி நின்றவர் அமரர் டி.சிவராம்.

உண்மையில் சிவராம் ஒரு ஊடகப் போராளி தமிழ் மண்ணையும், தமிழ் மக்களையும், தமிழ் பண்பாட்டையும், நேசித்த ஒரு போராளி. அவரது சிந்தனைகள், கருத்துக்கள், எழுத்துக்கள், அனைத்தும் இதையே வியாபித்திருந்தன. அவரது கருத்துக்கள் தூர நோக்குக் கொண்டவை தீர்க்கதரிசனம் மிகுந்தவை. இன்று சிவராம் பிரிக்கப்பட்டு 11 வருடங்கள் நிறைவெய்தி இருக்கின்றன. ஆனால் அவரது கருத்துக்கள், எழுத்துக்கள் மக்களிடமிருந்து பிரிக்கப்படவில்லை. அவற்றைப் பிரிக்கவும் முடியாது சித்தாந்தவாதிகளின் ஒழிக்கப்படலாம் அவர்களது கருத்துக்கள் ஒழிக்கப்படமுடியாதவை அவை என்றும் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும். இது சிவராமுக்கும் பொருந்தும்.

சிவராம் உரிமையின்றி உணர்வு கெட்டு வாழ்வதைவிட உரிமைக்காக உணர்வு கொண்டு எழுதுவதே மேல் என்ற உணர்வுடன் செயற்பட்டவர். தனது இறுதி மூச்சிருக்கும் வரை தமிழ் தேசியத்திற்காகவும், அதன் நலன்களுக்காகவும் உழைத்தவர். ஒரு ஊடகவியலாளன் என்ற வகையில் அவரது கருத்துக்களும், எழுத்துக்களும், அதையே வெளிக்காட்டி நிற்கின்றன. சிவராம் போன்ற ஊடகவியலாளர்களது இடம் இன்னும் நிரப்பப்படமலே இருக்கிறது. அதற்கு இன்றைய ஊடகவியலாளர்கள் மிக நீண்ட தூரம் பயணிக்கவேண்டும். இவ்விடைவெளி தமிழ் ஊடகத்துறை வரலாற்றுக்குப் பெரும் சாபக்கேடே.

உண்மையில் சிவராம் ஊடகத்துறையில் செயற்பாட்டாளராக எத்தகையவர்கள் அல்லது எப்படிப்பட்டவர்கள் இருக்க வேண்டும் என்று சிந்தித்தாரோ. அதே போல் அரசியற்துறை சார் தலைவர்களும் செயற்படுபவர்களாக இருக்க வேண்டும் எனச்சிந்தித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இந்தச் சிந்தனை ஓட்டங்களே தேசிய நலனும், நேர்மைத்திறனும், சரியான வழிகாட்டலும், தெளிவான சிந்தனையும், தூரநோக்கும், மொழித் தேர்ச்சியும், பண்பாட்டுப் பேணுகையும், தொழில்நுட்பத்திறனும் மிகுந்த அரசியல் சமூகப் பொருளாதார வரலாற்றுத் தெளிவு மிக்க, நற்சிந்தனை வாய்ந்த ஊடகவியலாளர்களும், அரசியற்தலைவர்களுமே சிவராமின் பேச்சிலும் எழுத்திலும் எதிரொலித்தன. அந்த எதிரொலிப்பின் தொகுப்பே இந்த நினைவுரை எனக்கூறி, இந்த இடைவெளியை எமது ஊடகமும் அரசியலும் நிரப்ப வேண்டும். என இந் நிகழ்வில் உரையாற்றினார்.

நன்றி

சுபீட்சம்

2016, வீரகேசரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிள்ளியும் கொடுக்காமல் அள்ளிக் கொடுப்பதுபோல் புதிய அரசியலமைப்பு

–கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா–

ஒன்றுபட்ட இலங்கைக்குள் பல்லின சமூகத்தின் அபிலாசைகளை நிறைவேற்றுவதாக இருந்தால், இந்த மக்கள் அனைவரினதும் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் பன்மைத்தன்மை, பல் சமய நல்லிணக்கத்தையும், உறுதிப்பாட்டுடன் முன்னெடுக்கக்கூடிய அரசியல் சீர்திருத்தங்களை இதய சுத்தியுடன், ஆட்சியாளர்கள் முன்வைக்க வேண்டும் என்று கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பு தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள உப குழு அறிக்கை தொடர்பாக கலந்துரையாடும் போதே இந்தக்கருத்தை கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா வெளியிட்டுள்ளார்.

அவரது நேர்காணலில் முழுவடிவம்,

**அரசியலமைப்பு உபகுழு அறிக்கை தொடர்பில் உங்கள் அபிப்பிராயம் என்ன?**

கிள்ளியும் கொடுக்காமல் அள்ளிக் கொடுப்பது போல காட்டுகின்ற செயற்பாடாகவே அமைந்துள்ளது இந்த அரசியலமைப்பு உபகுழு அறிக்கை. இது பாதிக்கப்பட்ட சிறுபான்மை மக்களுடைய அபிலாசைகளுக்கு ஒரு போதும் தீர்வாக மாட்டாது. மேலும், சர்வதேச தலையீட்டை அரசாங்கம், தானாக விரும்பி உள்ளே அழைப்பதற்கு ஒப்பாகும். யானை தன் கையாலேயே தன் தலைக்கு மண் அள்ளிப் போடுகிற செயற்பாட்டை முன்னெடுத்துள்ளது என்ற பழமொழி ஞாபகத்திற்கு வருகின்றது.

**மாகாண அதிகாரங்கள் இந்தப் புதிய அரசியலமைப்பில் எவ்வாறிருக்கும்? எத்தகைய கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.?**

இரண்டு மாகாணங்கள் தொடர்பான இணைப்புப்பற்றியும், அது தொடர்பான மக்களுடைய அபிலாசைகள் பற்றியும் ஆரோக்கியமான கருத்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முன்வைக்கப்படவில்லை. குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் சிங்கள மக்களுடைய அபிலாசைகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வாக கருத்தில் கொள்வதற்கு அதிகாரப்பரவலாக்கலில் எதுவுமில்லை. பொலிஸ் அதிகாரம் பற்றி பெரிதாகக் குறிப்பிட்டுள்ள போதும், அதனுடைய கடிவாளம் முழுவதும்,மத்திய அரசிடமே உண்டு. சிறு குற்றங்களைக் கண்டறிவதற்கு அதிகாரம் உள்ளதே தவிர, ஏனையவை அனைத்து மத்திய அரசிடமே உள்ளது.

ஆனால், மத்திய அரசிடம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், இந்த அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுடன் மத்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுடன் ஒப்பிடும் போது யானைப்பசிக்கு சோளப் பொரி போட்டுள்ளதுபோல் தென்படுகின்றது.

மாகாண அமைப்புக்களின் பெயரால், சிறு குற்றங்களைக் கண்டறிவதற்காக நியமனம் பெறும் பொலிசாருக்கு தான் சார்ந்த மாகாணங்களின் பதாதைகளை அடையாளப்படுத்துவதற்கான அதிகாரங்களே வழங்கப்பட்டுள்ளது.

### காணி சார் அதிகாரங்கள் எவ்வாறிருக்கின்றன?

காணி சார்ந்த அதிகாரங்கள் தெளிவற்ற தன்மையுடையதாக இருக்கின்றன். எனவே அது தொடர்பான தெளிவான தீர்க்கமான வரையறைகள் முன்வைக்கப்பட வேண்டும். வலது கையால் கொடுத்து இடது கையால் பறிக்கும் பொறிமுறையொன்று பின்பற்றப்படுவது ஆரோக்கியமானதல்ல.

### நிதித்துறையில் அதிகாரங்களும் இந்த உபகுழு அறிக்கையில் உள்ளது தானே.?

நிதித்துறை தொடர்பாக வெளிநாட்டு நிதிகளைக் கையாளும் அதிகாரங்கள் பரிந்துரைக்கப்படவில்லை. மத்திய அரசின் ஊடாகவே நிதிப்பரிபாலனம் முன்வைக்கப்படுகிறது. மாகாண சுயாதீன அபிவிருத்தி என்பது அந்த அந்த மாகாணங்களில் காத்திரமான அபிவிருத்திக்கான முன்னெடுப்புகளுக்கு இது தடையாக அமையும். இது பற்றிய விரிவானதும் தெளிவானதுமான அறிக்கைகள் மக்களுக்கு முன்வைக்கப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராட்சிய சபை உருவாக்கம் முக்கியமானதாகத்தானே பார்க்கப்படுகிறது. இது எவ்வாறிருக்கிறது?**

குறைந்தது 3 கிராம சேவகர் பிரிவுகளை இணைத்து இதனை உருவாக்குதல் பற்றிக் குறிப்பிட்டுள்ள போதும் அதனுடைய அதிகாரங்கள் தெளிவு படுத்தப்படவில்லை. ஆயினும். அவற்றை மாகாண சபைகள் கட்டுப்படுத்துவதாக அமைந்துள்ளன. தீர்வு முன்மொழிவில், இராட்சிய சபைகளுக்கே முக்கியத்துவம் கொடுப்பதாக பல இடங்களில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இது பழைய மாவட்ட சபை முன்மொழிவுகளை விடக் குறைந்த அதிகாரங்களைக் கொண்டதாகவே அமைந்துள்ளது. மக்களுடைய அபிலாசைகள் எண்ணங்கள், இவற்றை இவை எந்தளவுக்கு பூர்ததி செய்யும் என்ற சந்தேக்தினை முன்னெடுத்துள்ளது.

ஒற்றையாடசி தொடர்பாக மிக இறுக்கமான பாதுகாப்பு பரிந்துரைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதும், அந்தப்பரிந்துரைகளுக்கு ஏற்ற அளவிலான அதிகாரங்கள் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு பரிந்துரைகள் பரிந்துரைக்கப்படவில்லை. பொருளாதாரம், கல்வி, உல்லாசப்பயணத்துறை தொடர்பில் தெளிவான விளக்கங்கள் முன்வைக்கப்படவில்லை.

**பாதுகாப்புத் திருத்தச் சட்டங்கள தொடர்பாகமுன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் எவ்வாறிருக்கின்றன. ?**

ஒருவருடைய தனிப்பட்ட கைது, தடுத்து வைத்தல், விசாரணைகள் தொடர்பாக தெளிவான கால நிர்ணயங்கள் முன்வைக்கப்படவில்லை. எனவே வலிசுமந்த இனங்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ள இந்த உப குழு அறிக்கையானது, அவர்களது இயல்பான அபிலாசைகளை எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யமாட்டாது, இது பெரும்பான்மை மக்களுடைய சிந்தனைகளை விட அந்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் இனத்துவ அரசியல்சார்ந்த கருத்தாகவே நோக்க வேண்டியுள்ளது.

இந்த முன்மொழிவு ஒன்றுபட்ட இலங்கைக்குள் பல்லின சமூகத்தின் அபிலாசைகளை நிறைவேற்றுவதாக இருந்தால், இந்த மக்கள் அனைவரினதும் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் பன்மைத்தன்மையும், பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சமய நல்லிணக்கத்தையும், உறுதிப்பாட்டுடன் முன்னெடுக்கக்கூடிய அரசியல் சீர்திருத்தங்களை இதய சுத்தியுடன், ஆட்சியாளர்கள் முன்வைக்க வேண்டும். தங்கள் அரசியல் அதிகாரங்களுக்காக, தங்களுக்கு வாக்களித்த மக்களை தொடர்ச்சியாக ஏமாற்றி இந்த இலங்கைத்திருநாட்டை தொடர்ந்தும் இரத்த ஆறாக மாற்றுகின்ற முயற்சிகளை ஆட்சியதிகாரமுடையவர்கள், மேற்கொள்வதை இலங்கைத் தாய் நாட்டை நேசிக்கும் இலங்கைச் சமூகத்தவர் எவரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்க்ள. இந்த நிலைப்பாட்டையே சர்வதேச சமூகம் எதிர்பார்த்து நிற்கின்றது. எனவே ஆட்சியாளர்கள். குறுகிய அரசியல் போதங்களை மறந்து நியாயமானதும், தீர்க்கமானதும், நல்லிணக்கமானதுமான சர்வதேச தலையீடற்ற ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான தீர்க்கமான சிறந்ததான, ஆரோக்கியமான, தீர்வினை முன்மொழிவதன் மூலம், இலங்கைப் பல்லிணக்கச் சமூகம் சுயாதீனத்துடனும், இறமையுனும், தன் தாய் நாட்டை நேசிக்கின்றதுமான அதிகாரங்களைப் பெற்றுக கொள்ள முடியும்.

அவ்வாறான சூழலிலேயே தான் இலங்கையின் பெருளாதாரமீட்சியும், சுதந்திரமும், இறமையும், தன்னாதிக்கத்தையும் கட்டியாளக்கூடிய சூழ்நிலையை இந்த இலங்கைத்திருநாடு அனுபவிக்கும். எனவே , இது எமது நாடு, எமது தேசம், என்ற உணர்வுபூர்வமான கொள்கை உறுதிப்பாட்டுடன் ஆட்சியாளர்கள் செயற்பட வேண்டும்.

நன்றி

சுபீட்சம்
பட்டி நியூஸ்
ஒக்டோபர் 2, 2017


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஊடகவியலாளர் நடேசனின் படுகொலை நியாயப்படுத்த முடியாத ஒன்று

-கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா-

ஊடகவியலாளர் நடேசனின் படுகொலை நியாயப்படுத்த முடியாத ஒன்று ஆனால் உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டிய ஒன்று என ஊடகவியலாளர் அமரர் ஐ.நடேசனின் நினைவேந்தலையொட்டிய சிறப்புப் பேட்டியில் முன்னாள் தினக்கதிர் உதவி ஆசிரியரும் கல்வியாளருமான கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா தெரிவித்தார்.

முன்னாள் தினக்கதிர் உதவி ஆசிரியரும் கல்வியாளருமான கலாநிதி எம்.பி.ரவிச்சந்திராவுடனான நேர்காணலின் முழு வடிவம் வருமாறு,

கேள்வி:- ஊடகத்துறையின் மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவரான அமரர் ஐ.நடேசன் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில்- நடேசன் கருவி பற்றிய கருவியின் கூர்மை பற்றிய தெளிந்த சிந்தனையுடன் சேவையாற்றியவர். ஊடகத்துறையை இதயசுத்தியுடனும் இலக்கிய நேர்மையுடனும் அணுகியவர். சமுதாயச் சிந்தனையில் அன்றைய காலகட்டத்தில் என்றுமில்லாத அளவுக்கு ஏற்பட்ட தேவையை இயன்றவரை ஈடுசெய்தவர். தனது எழுத்துக்களால் தமிழ் தேசியத்தை நேசித்தவர் இந்த மண்ணையும் மக்களையும் தனது எழுத்துக்களால் வழிப்படுத்தியவர். இன்று நடேசனின் குரல் மௌனிக்கப்பட்டு 12 ஆண்டுகள் நிறைவுறுகிறது.

கேள்வி:- தமிழ் தேசிய விடுதலை தொடர்பாக நடேசனின் பணி பற்றிக் கூறுங்கள்?
பதில்- எண்பதுகளில் விடுதலைப்போராட்டம் முகிழ்த்த காலகட்டத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் இணைந்து செயலாற்றியதாக அறிந்துள்ளேன். அதன் பின் சகோதரப் படுகொலைகள் இயக்க முரண்பாடுகள் காரணமாக அதில் இருந்து ஒதுங்கி அன்றைய கால கட்டத்திலேயே இயல்பு வாழ்விற்குத் திரும்பியவர். முதலாவது வடக்கு கிழக்கு மாகாண அமைச்சின் தகவல் உதவிப் பணிப்பாளராக கடமையாற்றியவர். ஆயினும் உள்ளத்தாலும் உணர்வாலும் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களையும், அவர் தம் விடுதலை உணர்வையும் நேசித்தவர். ஜனநாயக வழியில் மிகயதார்த்தமாக மிகத் தெளிந்த சிந்தனையுடன் ஊடகத்துறையில் செயற்பட்டவர்.

கேள்வி:- நடேநசனின் பத்தி எழுத்துக்கள் பற்றி என்ன கூற விரும்புகிறீர்.?

பதில்- 90களின் பின் நடேசன் மரணிக்கும் வரையில் அவரது எழுத்துக்களுக்கு ஒரு முக்கியத்துவம் இருந்தது. இதனை அவர் பற்றி அறிந்தவர்கள் மாத்திரம் அல்ல அவர் தந்த செய்திகளைக் கேட்வர்கள், வாசித்தவர்கள் அனைவருக்கும் புரியும். நடேசனின் எழுத்துக்களுக்கு ஞாயிறு வீரகேசரி இதழ் பெரும் பாலும் ஒருபக்கத்தை ஒதுக்கியிருந்தது. சக்தி வானொலி, அதே போல் பி.பி.சி, ஐ.பி.சி வானொலி சேவைகளும் அவரது செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தன. அன்று வடக்கு கிழக்கு இணைந்த மாகாண நிர்வாக முறைமை ஸ்தாபகம் பெற்ற போது மக்களுக்கு அரசியற் தெளிவூட்டல் விடயம் தொடர்பான எழுத்தாக்கங்களை மிகத்தெளிவுடன் வெளிப்படுத்தியவர். இவரது இலங்கையின் இனமுரண்பாடுகளின் வரலாறு எனும் நூல் ஆக்கத்திற்கு, வீரகேசரி வாரவெளியீட்டில் வந்த கட்டுரை வடிவங்களே மிக முக்கிய காரணமாயிற்று. இந் நூல் இலங்கை சமகால அரசியல் நூல் வரலாற்றில் மிக முக்கிய பதிவுகளில் ஒன்று ஏனெனில் காலத்தின் தேவை குறித்து வெளிக் கொணரப்பட்ட முக்கிய பணியது.

இதற்கு உந்து சக்தியாக வீரகேசரியின் இணையாசிரியர் வீ.தேவராஜா அவர்களும், சிவராம் போன்றவர்களும் பின்புலத்தில் இருந்தனர்.

கேள்வி:- நடேசனும் அவர் வாழ்ந்த கால கட்டம் பற்றியும் என்ன கூற விரும்புகிறீர். ?

பதில்- அன்று போல் இன்று இல்லை. அன்றைய நிலைமைகள் வேறு. மனிதம் மௌனிக்கப்பட்ட காலம். அவர் மனிதத்துக்காக குரல் கொடுத்தவர். காரணமின்றி அநியாயமாக கொண்றொழிக்கப்பட்டவர்.

உண்மையில் எமது தேசத்தின் இன்றைய கால கட்ட அரசியலில் மிக முக்கியமான ஓர் அம்சம் இன உணர்வுகள் தொடர்பாக மேற்கிழம்பும் பிரச்சினையேயாகும். இனப்பிரச்சினையின் முக்கியத்துவம் அரசாங்கத்தால் வலியுறுத்தப்பட்ட அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வேளையில் அதன் தீர்வுக்கு அன்று தொட்டு இன்றுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

இந் நிலையில் எமது வரலாறு பண்முகப்பட்ட நிலையில் அன்றும் இன்றும் நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இன உணர்வு என்பது ஒரு மனிதனின் தன்னடையாளங்களில் ஒன்றாகச் செயற்படுகிறது அது மொழி, மதம், பண்பாடு போன்ற பல்வேறு வகைகளில் வெளிப்படும் காரணத்தால் அது முற்றாகப் புறக்கணிக்கக் முடியாத ஒன்று.

மனிதர்கள் வாழ்நிலையை அவர்களின் உணர்வுகள் நிர்ணயிப்பதில்லை. ஆனால் அதற்கு மாறாக அவர்களின் சமூக வாழ் நிலைமையே உணர்வுகளை நிர்ணயிக்கிறது.

இந்த வகையில் அவர் தமிழ் இனத்தின் வரலாற்றுக்குள் வாழ்ந்து தமிழ் இனத்தின் வரலாறாகிப் போனவர்களுள் ஒருவர். அவர் வரலாற்றில் நினைவேந்தல் செய்யப்பட வேண்டிய மனிதர்.

கேள்வி:- அமரர் நடேசனின் படுகொலை பற்றி ஏது கூற விரும்புகிறீர்கள்?
பதில்:- நியாயப்படுத்த முடியாத ஒன்று ஆனால் உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டிய ஒன்று.

கேள்வி:- நினைவேந்தல் தொடர்பாக தங்கள் கருத்தென்ன?
பதில்:- அவர் தொடர்பான நிகழ்வுகளை ஊடகவியலாளர்கள் செய்வது மிகப் பொருத்தமானது. ஊடகத்துறை சார்ந்தோரை ஊடகவியலாளர்கள் கௌரவிப்பதும், நினைவு கூறுவதும் கட்டாயமானதும் காலத்தின் கடமையும் கூட. அத்தோடு ஒரு தொழில் வழிப் புரிதலும் கூட. எனவே சமுதாயச் சிந்தனையின் பாற்பட்டு உழைக்கும் ஒரு ஊடகவியலாளனை மக்கள் அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் என சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் நினைவில் நிறுத்துவதோடு எதிர்கால சந்ததிக்கும் இம் முன்னுதாரணமானவர்களை நினைவேந்தல் செய்வது வரலாற்றின் தேவையாகும்.

நன்றி

வீரகேசரி, சுபீட்சம் - 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மாற்றம் சிறுபான்மையினரையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் மற்றுமொரு அரசியல் நாடகமா?

-கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா.-

தற்போதைய அரசியல் மாற்றம் சிறுபான்மையினரையும் சர்வதேசத்தினையும் ஏமாற்றும் மற்றுமொரு அரசியல் நாடகமா என்ற சந்தேகம் இன்றைய அரசியல் சூழ்நிலையைப் பார்க்கின்ற போது எண்ணத் தோன்றுகிறது என விரிவுரையாளரும் கல்வியியலாளருமான கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா கேள்வியெழுப்புகிறார்.

இலங்கையின் இன்றைய அரசியல் சூழ்நிலை தொடர்பாக இன்றைய தினம் கலந்துரையாடியபோது இவ்வாறு தெரிவித்தார்.

தற்கால அரசியல் சூழ்நிலையென்பது பொது மக்களைப் பொறுத்தவரையில் புரிந்து கொள்ள முடியாத ஒரு விடயமாக இருந்தாலும் அறிவுஜீவிகள் மத்தியில் ஊகங்களின் அடிப்படையில் சில ஐயப்பாடுகள் எழுந்துள்ளன. முதலாவது விடயம், அரசியலமைப்புக்கு முரணான வகையில் 19ஆவது திருத்தத்தின் 46-2, 46-4 படி, பாராளுமன்ற பெரும்பான்மை அல்லது பிரதமர் ஒருவர் பாராளுமன்றத்தை நடாத்த முடியாத சூழ்நிலை இருப்பதாக எழுத்து மூலம் அறிவித்தால் பாராளுமன்றம் கலைக்கப்படும். ஆனாலும் அது பொதுத் தேர்தலுக்கு அழைப்புக் கோர வேண்டும். அல்லது அடுத்த பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய தேவை இருக்கிறது. இந்த விடயத்தில் அதற்கு அரசு தவறியிருக்கிறது. ஜனநாயக உரிமை மீறப்பட்டிருக்கிறது.

ஆனால் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் அவர்கள், புதிய பிரதமர் மகிந்த ராஜபக்சவைச் சந்தித்து தமிழ் மக்களின் தீர்வைப்பற்றிப் பேசும்போது தான் மக்களால் தெரிவு செய்யப்படவில்லை யென்றும் தேர்தல் மூலம் தாங்கள் தெரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செய்ப்பட்டால் தீர்வு தொடர்பாக எழுத்து மூலம் தரலாம் என்றும் புதிய பிரதமர் கூறியிருக்கிறார்.

எனவே புதிய பிரதமர் தான் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதமர் அல்ல என்பதை ஒப்புக்கொண்டுள்ளதுடன் ஜனநாயக விரோதமான செயல் என்பதை அவரே ஏற்றுக் கொண்டுள்ளார் என்பது முதலாவது விடயம்.

இரண்டாவது, பிரதமராக ஜனநாயக விரோதமாக நியமிக்கப்பட்டார் என்றால் அவரை எதிர்க்கட்சித்தலைவர் ஏன் சந்திக்கச் செல்ல வேண்டும். தற்போதைய புதிய பிரதமர் பாராளுமன்ற பெரும்பான்மை குறித்து நிஷரூபணங்கள் செய்யப்படாமல் இருக்கின்ற நிலையில் அவரைச் சந்திக்கச் சென்றமையானது தமிழ் மக்களுக்கெதிரானதொரு வரலாற்றுத் தவறு.

2015ல் நல்லாட்சியை உருவாக்குவதற்கு ஜனாதிபதியாவதற்கு மைத்திரிபால சிறிசேன எப்படி பிரிந்து வந்தாரோ, மகிந்த ராஜபக்சவுக்கு சர்வதேச அழுத்தங்கள் ஏற்பட்ட நிலையில் அவருடைய அரசைக் கவிழ்த்து மின்சாரக் கதிரையில் இருந்து காப்பாற்றியது போல, நவம்பர் 7ம் திகதி புதிய அரசியலமைப்பு முன்வைக்கவேண்டிய நிலையில், ஐ.நா. வின் மனித உரிமைச் சபையில் பெப்ரவரி 22ஆம் திகதி அதனுடைய தீர்மானம் நிறைவேற்றிய அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அது போல பண வீக்கம் அதிகரித்துள்ள பொருளாதாரம் மிகமோசமாக இருக்கிறது. வரவு செலவுத்திட்டத்தினை நிறைவேற்ற முடியாத நிலையில், தொழிலாளர்களின் சம்பள உயர்வுகள், அரசாங்க உத்தியோகத்தர்களின் வேதன உயர்ச்சி இவ்வாறானவற்றினைச் செய்யமுடியாத நிலை இப்படியான பல பிரச்சினைகள், இந்தப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசு குழப்பத்தினை உருவாக்கி புதிய பாராளுமன்றமோ, புதிய தேர்தலுக்கோ வியூகம் ஒன்றை அமைத்து நாடகம் ஒன்றினைக் கொண்டுவந்து அழுத்தங்களிலிருந்தும் பெப்ரவரி மாதவிடயத்திலிருந்தும் தப்பித்துக்கொள்வதற்கான முயற்சியாக இது இருக்கலாம் என்று நம்பத் தோன்றுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமொரு பிரச்சினை, இத்தகைய புரட்சியானது ஒரு சுய நலப் போக்காக இருந்தாலும் கூட, இலங்கையினுடைய பண வீக்கம் தலைக்குமேல் போய்க் கொண்டிருக்கின்ற நிலையில், இதில் பாதிக்கப்படுகின்றது சாதாரண அப்பாவிப் பொது மக்கள்.

பங்குச் சந்தைகள் வீழ்ச்சியடைந்துள்ளன. சர்வதேச முதலீட்டாளர்கள் விலகிக் கொண்டிருக்கிறார்கள். ஆடைகள் ஏற்றுமதி தடைப்பட்டிருக்கிறது. ஜீ.எஸ்.பி வரிச்சலுகை விலக்கப்படவிருக்கிறது. தேயிலை ஏற்றுமதி தடைப்படப்போகிறது. அதில் தொழிலாளர்களுடைய போராட்டம் நடைபெறுகிறது. அரச இயந்திரம் முடக்கப்பட்டிருக்கிறது. இன்னமும் பணவீக்கம் அதிகரித்து மக்கள் மீதான வரிச்சுமை அதிகரிக்கப்போகிறது. நாடு அதலபாதளத்துக்குச் செல்லவிருக்கிறது.

மகிந்த ஆட்சிக்காலத்தில் இருந்த கடன் செலுத்துவதே இந்த ஆட்சிக்காலத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அது பெரிய பிரச்சினை. அதே போல இந்த 4 நாட்களில் நடைபெற்ற பிரச்சினை இன்னும் மோசமாகச் செல்லும். அமெரிக்க டொலர் ஒன்றின் விலை 16ஆம் திகதியில் 200 ரூபாவுக்குச் உயர்ந்து செல்லும் என்றும்சொல்லாம். அதறகான சூழல் மிக விரைவாக ஏற்படும். இலங்கை வரலாற்றிலேயே நாணயத்தினுடைய பெறுமதி மிக மோசமாக வீழ்ச்சியடைந்தது இப்போதுதான்.

எனவே இந்தச் சூழ்நிலைகளை ஒட்டு மொத்தமாகப் பார்க்கின்ற போது இலங்கை மக்களுடைய முதுகின் மேலேயே இந்த வரிச் சுமைகள் அறவிடப்படுகின்றன. அவர்களுடைய வாக்கிலே வந்தவர்கள். அவர்களுடைய நலன்களுக்காக கொள்கைகளுக்காக மக்களை வருத்துகின்ற அதே வேளை சர்வதேச நிலைப்பாடுகள் ஊடாக தங்களுடைய நிலைப்பாடுகளை மாற்றுவது தேசியவாத சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு உலக நாடுகளை ஏமாற்றுகின்ற போக்குகள்தான் இங்கிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுபான்மை மக்களுக்கான விடுதலையோ, அரசியல் தீர்வோ இங்கு கிடைக்கப் போவதற்கான சாத்தியப்பாடுகள் எதுவுமில்லை. அந்த விடயத்தில் முஸ்லிம் காங்கிரசோ, மனோ கனேசனுடைய முன்னணியோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ ஐ.தே.க. வை விட்டு வெளியேறுமாக இருந்தால் அவர்கள் எதிர்பாரப்பதை மகிந்த அரசு கொடுக்க மாட்டாது. இதற்கு மகிந்தவின் நேற்றைய பதிலே சிறந்த உதாரணமாகும்.

குறைந்த பட்ச அதிகாரமுடைய அரசியல் தீர்மானம் ஒன்றைத் தருகின்ற அரசியல் திட்டமாகத்தான் இந்த அரசியலமைப்பு முன்வைப்பாக இருந்தது. அந்த தீர்மானமும் இல்லாதொழிக்கப்படுகின்றதாகத்தான் இந்த ஆட்சி மாற்றத்தின் அடிநாதமாக விளங்குவதாக நான் உணர்கின்றேன். அந்த வகையில் ஏமாறப் போவது சிறுபான்மையினமக்களே.

நன்றி

சுபீட்சம்
ஒக்டோபர் 31, 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மக்கள் தங்களுடைய இருப்புக்களிலும் கொள்கைகளிலுமிருந்து மாறவில்லை

-கலாநிதி ரவிச்சந்திரா-

மக்கள் தங்களுடைய இருப்புக்களிலும் கொள்கைகளிலுமிருந்து மாறவில்லை. இந்த அரசியல் சிந்தனை தமிழ் மக்களின் அபிலாசைகளையும உரிமைகளையும் வென்றெடுப்பதற்காக தொடர்ந்து போராடிச் செல்வதற்கு உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும் என்று விரிவுரையாளரும் கல்வியியலாளருமான கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா கூறுகிறார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் குறித்து மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள குழப்பகரமான நிலை குறித்து வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு கூறினார். எமது வாசகர்களுக்காக அவரது நேர்காணலின் முழு வடிவம்.

**இன்றைய தமிழ் மக்களின் அரசியல் சூழ்நிலை என்ன?**

குறிப்பாக இன்று மக்கள் தங்களுடைய இருப்புக்களிலும் கொள்கைகளிலுமிருந்து மாறவில்லை என்பதை அவர்கள் கைகளில் எடுத்தள்ள போராட்டங்கள் வெளிப்படுத்துகின்றன. எந்த மக்கள் தங்களுடைய அரசியல் உரிமைக்காகவும், தங்கள் அடிப்படைத்தேவைகளுக்காகவும் அரசியல் இயக்கங்களை ஆதரித்தார்களோ அந்த மக்களே அந்த இயக்கங்களை மறுதலிக்கத் தொடங்கியிருப்பதென்பது முற்றிலுமே மக்களால் ஜீரணிக்கப்படமமுடியாத ஒன்று. ஆதலால்தான் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆயுதப்போராட்ட மௌனிப்புக்குப்பின் தமிழ் அரசியல் கட்சிகளுடைய நடைமுறைச் செயற்பாடு ஒன்றும் கொள்கை ஒன்றுமாக பிளவு பட்ட முரண்பாடொன்றை மக்களிடையே தோற்றுவித்திருக்கிறது. இந்த முரண்பாடுகளின் வெளிப்பாடுகளே கட்சி மோதல்களாக வெளிக்கிளம்பியுள்ளன. ஏந்த மக்களுக்காக எந்த மக்கள் போராடினார்களோ அந்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளே மக்களைப் புறந்தள்ளுகின்ற போக்கு இன்று கட்சி அரசியலில் மேலோங்கிய காரணத்தினால் அதிகார ஆதிக்கமும் பிரபுத்துவச்சிந்தனையும் தம் தம் கட்சி சார்ந்த நலன்களும் தமிழ்தேசியத்தின் இருப்பை பல்வேறு முனைகளில் கூறு போட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வைத்துள்ளது. இத்தகையதொரு சூழலில்த்தான் மாற்றுத் தலைமைகள் தொடர்பான சிந்தனை தமிழ் மக்களின் கொள்கைப் பற்றுறுதியுடையவர்களிடத்தில் மேலோங்கியுள்ளது.

**இந்த வகையில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் என்ன கூற வருகிறீர்கள். ?**

ஊள்ளூராட்சித் தேர்தல் என்பது தமிழ் பிரதேசங்களைப் பொறுத்தவரையில் தனிநாடு கேட்பதற்கான தேர்தல்ல. இது எங்களது அடிப்படைய இருப்புக்களைச் சரிபார்த்துக் கொள்வதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எமது கிராமத்தை நாமே அபிவிருத்தி செய்வோம். எமது சுய பொருளாதாரத்தை நாமே கட்டியெழுப்புவோம். மேலும் பெண்கள் உரிமை தொடர்பாக, பெண்களுடைய தலைமைத்துவத்தினைக் கொண்டுள்ள குடும்பங்களையும், அரசியல் உபாயங்களுடன் அவர்களுடைய அரசியல், சமூக விடுதலை குறித்தான சிந்தனையை விருத்தி செய்வதுடன் அரசியல் தலைமையை ஏற்படுத்துவதற்கான ஆரம்ப தலைமைத்துவப் பண்பினை அவர்களுக்கு வழங்குதல். மேலும் நாளைய தலைமுறையினரைக் கருத்தில் கொண்டு இளம் அரசியல் தலைமைகளை இளைஞர்களிடத்தில் உருவாக்குதல். இந்தத் தேர்தல் தமிழ் பிரதேசங்களைப் பொறுத்தவரையில் தமிழர்களுடைய அரசியல் தீர்வு தொடர்பாக எடுக்கப்படுகின்ற முன்னெடுப்புக்கள் தமிழரின் அபிலாசைகளை எவர் சரியா முன்னெடுப்பார்கள் என்பதை மக்கள் சரியாக இனங்கண்டு வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம். தமிழ் தேசிய அரசியலில் தமிழ் மக்களை அவர்களுடைய அரசியல் போராட்ட வரலாற்றிலிருந்து ஏமாற்ற முடியாத அடிப்படை ஜீவாதாரக் கோரிக்கையாக சமஸ்ட்டி தரத்திலான அதிகாரத்தினைப் பகிர்ந்து கொள்வதற்கான வாக்குறுதியை எந்தக் கட்சியும் மீளப்பெறமுடியாது என்பதை நிஷரூபித்தல். சிறையிலே வாடுகின்ற அரசியல் கைதிகளுடைய விடுதலை தொடர்பாகவும், காணாமல் போனவர்களுடைய நிலைமை தொடர்பாகவும் தெளிவாக மக்கள்மீண்டும் ஒருமுறை உலகுக்கு அழுத்திச் சொல்லுதல்.

**இன்றைய அரசியல் கட்சிகள் தொடர்பாக தமிழ் மக்களின் மனங்களில் எழுந்துள்ள ஐயப்பாடான நிலைமை எது எனக் கூற முனைகிறீர்கள். ?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுடைய இருப்புகளிலும் கொள்கையிலும் இருந்து மாறவில்லை என்பதைக் காட்டுவதற்காக இந்தத் தேர்தலை சரியான முறையில் தமிழ் மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டம், அரசியல் இருப்பு, அபிலாசை இவற்றை வெளிக்காட்டுவதற்கு. தொடர்ந்து நாங்கள் சோரம் போவதற்குத் தயாராக இல்லை. தமிழருடைய தனிநாட்டுக் கோரிக்கைகள் அதற்கான நியாயமான போராட்டங்கள், அர்ப்பணிப்புகள், இழப்புகள் இவையெல்லாம் தாண்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்த எந்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை. வெறுமனே ஒரு அறிக்கைவாதக் கட்சியாக, தமிழ் மக்களுக்கு தமிழில் அறிக்கை விடுகின்ற கட்சியாக, தமிழ் மக்களுக்கான அடிப்படை விடயங்களைக் கூட வழங்குவதற்கு இடைஞ்சலாகத் தான் தமிழ்த் தேசிய அரசியல் இருக்கின்றது என்பதனையும் தமிழ் மக்கள் சொல்லியாக வேண்டும்.

வெறுமனே ஆசனப் பங்கீட்டுக்கான கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டுக் கட்சிகள் மாறியிருப்பது தமிழ் மக்களுக்கு செய்கின் துரோகமாகவே கருதப்படுகின்றது. தமிழ் மக்களின் தீர்வு விடயத்தில் இலங்கை அரசும், ஜனாதிபதியும் சமஸ்டித் தீர்வுதர மாட்டேன் என்று பகிரங்கமாக அறிவித்திருக்கின்ற சந்தர்ப்பத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் அவர்கள் சமஸ்டியை அடிப்படையாகக் கொண்ட தீர்வு வெளியாகின்றது என்று சொல்லியிருப்பது தமிழ் அரசுக் கட்சி எதை அடிப்படையாகக் கொண்டு இதனைத் தெரிவிக்கின்றது. இந்தப் பேச்சுகளுக்குப் பின்னால் ரெலோ, புளொட் போன்ற கட்சிகள் தமிழ் அரசுக் கட்சியுடன் எந்தவிதப் பேச்சும் இல்லை என்று சொல்லிவிட்டு பின்னர் மீண்டும் கொழும்புப் பேச்சில் சுமூகமான தீர்வு கிடைத்தது என்று சொல்லுவது தங்களுடைய கட்சி இருப்புக்களையும், தங்கள் ஆசனங்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கான பேச்சுவார்த்தையா? அல்லது தமிழ் மக்களின் இருப்புக்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய பேச்சுவார்த்தையா என்பதைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ளவே வேண்டும். இரண்டாவது விடயம் பிரதமர் ரணில் மூலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஊடகப் பேச்சாளர் சுமந்திரன் பேசுவதால் தமிழ் அரசுக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பின்னால் நிற்கின்றதா? அப்படியானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பேரில் முன்கதவில் நின்று தமிழ்த் தேசிய வாதத்தைப் பேசிக் கொண்டு பின்கதவால் பேரினவாதக் கட்சிகளுக்குத் துணை போகின்றதா என்பதை அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தெளிவுபடுத்த வேண்டும்.அந்த தெளிவுபடுத்தலினூடாக ரெலோ, புளொட் போன்ற கட்சிகள் தாங்கள் இனியும் தமிழ் அரசுக் கட்சியுடன் இணைந்து செயற்பட முடியாது என்று தெரிவித்துக் கொண்டு வெளியேறாமல் இருக்கின்றார்கள் என்றால் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளை இவர்கள் ஆமோதித்துச் செல்கிறார்களா?

**இன்று தமிழ் மக்களுடைய சிந்தனைகள் அரசியல் கட்சிகள் நோக்கி எவ்வாறு வட்டமிடுகின்றன. ?**

எந்த மக்கள் தங்கள் குழந்தைகளையும், தங்கள் சொத்துக்களையும், தங்களையும் அர்ப்பணித்து தங்கள் உரிமைக்காகப் போராடினார்களோ? அதற்காக தங்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் போராடுவார்கள் என்று நம்பினார்களோ அவர்கள் அனைத்தையும் கைவிட்டு தமிழ் மக்களின் போக்குக்கும், சிந்தனைக்கும், அபிலாசைக்கும், இயல்பு வாழ்க்கைக்கும், அவர்களின் எதிர்வு கூறலுக்கும் முரனான வகையில் நடந்து கொண்டிருப்பதாவது தமிழ் மக்களின் உரிமைகள் அபிலாசைகள் மீது ஏறி நின்று உதறித்தள்ளுவதாகவே அமைகின்றது என்ற கருத்தொன்றும் இப்போது தோன்ற ஆரம்பித்திருக்கிறது.

**தமிழ் தரப்பு பல்வேறு கூறுகளாகப் போட்டியிடுவது தொடர்பாக உங்களுடைய கருத்தென்ன?**

தமிழ் மக்கள் சின்னங்களுக்காகப் போராடவில்லை. சின்னங்கள் இருந்தால்தான் வெற்றியடையலாம் என்ற சிந்தனை நம் அரசியல்வாதிகள் பலரிடமுள்ளது. உண்மையில் கொள்கைத் தெளிவும் பற்றுதியும்தான் தமிழ் மக்களின் அடிப்படைப்பிரச்சினை. எந்த நோக்கத்திற்காக எமது போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன என்பதனைத்திரும்பிப்பார்க்க வேண்டியது இதில் முக்கியம். எமது மாணவர்களின் பல்கலைக்கழகத் தரப்படுத்தல், எமது பிரதேசங்களில் குடியேற்றம், எமது மக்களின் உரிமைகள், தொழில்வாய்ப்புகள் எமது பிரதேச இந்த அபிவிருத்தி போன்ற விடயங்களுக்காகவே போராட்டங்களுக்கான வித்து எமது தந்தை செல்வா அவர்களினால் முன்னெடுக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அகிம்சைப் போராட்டம் பயனளிக்கவில்லை என்பதால் தான் ஆயுதம் தூக்கி எமது இளைஞர்கள் போராடினார்கள். கடந்த 70 ஆண்டுகள் அகிம்சையிலும், ஆயுத ரீதியிலும் போராடியவர்களுக்கு சர்வதேச அனுக்கிரகங்களுடன் கிடைக்கப்பெறுகின்ற தீர்வுகள் முன்மொழியப்படுகின்ற தருவாயிலே வெறுமனே அதிகாரத்திற்காகவும், பதவிக்காகவும், கதிரைக்காகவும் தமிழ் மக்களின் உரிமைகளை இராஜதந்திர ரீதியாக சர்வதேச அனுகுமுறைகளையும் புறந்தள்ளி தமது சொந்த சுயநல விருப்பு வெறுப்புகளுக்குள் தமிழ் மக்களின் உரிமைகளையும் அபிலாசைகளையும் பலியிடுவதென்பது தமிழ் மக்களால் ஜீரணிக்க முடியாத ஒன்று.

**தமிழ் மக்களின் ஏக பிரதிநிதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட போதிலும், புலிகளுக்குப் பிறகு அந்த நோக்கத்தை அவர்கள் முன்னெடுத்துள்ளார்களா?**

தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் தேசிய சித்தாந்தங்களை தந்தை செல்வா காலம் முதல் இன்றுவரை முன்னெடுத்திருக்கின்றதா என்பது இன்று பலரிடமெழுந்துள் ளகேள்வி. அகிம்சைப் போராட்டத்தில் தந்தை செல்வா தனது தமிழரசுக்கட்சியினைக் கைவிட்டு உதய சூரியன் சின்னத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் கூட்டணியை ஸ்தாபித்த போது அடைந்த வெற்றியும் மாற்றங்களும் இந்திய இலங்கை ஒப்பந்த காலத்தில் வெளிச்சவீட்டுச் சின்னத்தை தமிழர்கள் வெல்ல வைத்த வரலாறும் தமிழர்களுக்குச் சின்னமல்ல பிரச்சினை அவர்களது அடிப்படை உரிமையும் அபிலாசையுமே பிரச்சினை என்பதை உலகம் அறிந்து கொண்டது. ஏந்த நோக்கத்திற்காக தமிழ் மக்கள் அகிம்சையில் போராடி தமது உரிமைக்காக அது பயனளிக்காமல் ஆயதத்தை ஏந்தினார்களோ அது தமிழ் மக்கள் இல்லையென்றால் தமிழ் தேசியமும் அதனை முன்னெடுத்து போராட்ட இயக்கங்களும் அரசியலும் இல்லை. போராட்டமும் இல்லை. எனவே இது மக்களின் போராட்டம் மக்களின் கட்சிகளின் போராட்டம். மக்கள் தங்கள் உறவுகள், பிள்ளைகளைக் கொண்டு போராடினார்களே தவிர இருக்கின்ற அரசியல்வாதிகளையும், அவர்களின் சுயநலத்தையும் கொண்டு போராடவில்லை. இன்று அரசியல் இருப்புக்களில் இருப்பவர்கள் போராட்டத்தின் பெயரால் தங்கள் சொந்த வாழ்க்கையை வளம்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். சிறையில் வாழும் கைதிகள் தொடர்பாகவோ, இயல்பு வாழ்க்கைக்காகத் துடிக்கும் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தொடர்பாகவோ, போராட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகள் தொடர்பாகவோ வெறும் அறிக்கைவாதங்களை மட்டுமே அவர்கள் முன்வைத்துச் செல்லுகின்றார்கள். சர்வதேச ரீதியாகவும், தேர்தல் விஞ்ஞாபன ரீதியிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வாக்குறுதி அளித்ததைப் போன்று எந்த முன்னெடுப்புக்களையும் இதுவரை முன்னெடுக்கவில்லை என்பது புரிந்து கொள்ளப்படவேண்டும்.

**தமிழ் மக்களுக்கு மாற்றுத் தலைமை தேவை என்ற கருத்தியல் தொடர்பில் உங்களது அவிப்பிராயம் என்ன?**

ஒரு ஜனநாக நாட்டில் மாற்றுத் தலைமைப்பண்புகள் மேலோங்குவதென்பது தவிர்க்க முடியாத ஒன்று. இலங்கையைப் பொறுத்தவரையில் குறிப்பாக தமிழ் பிரதேசத்தில் இவ்வளவு காலமும் மாற்றுத் தலைமைகள் இல்லாத சிந்தனைகள் காரணமாகத்தான் ஆயதப் போரின் மௌனத்தின் பின் மீண்டும் நிலப்பிரபுத்துவ மேலாண்மைக் கோட்பாடுகளும் சாதிய வாதங்களும் பிரதேச வாதங்களும் மீண்டும் மேற்கிளம்பும் சூழ்நிலை வலுப்பெற்றிருக்கிறது. இத்தகைய நிலையில் இலங்கையில் சிங்கள, முஸ்லிம் மக்களிடையே மாற்றுத் தலைமைகள் இருந்த போதிலும் தமிழ் மக்களுக்கு இவ்வாறான சூழல் இருக்கவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பைத் தவிர அவர்கள் சொல்வதையும் கேட்பதையும் தவிர வேறு எதனையும் சாதிக்க முடியாத சூழலே இருந்தது. மாற்றுத் தலைமைகளின் உருவாக்கம் ஜனநாயக ரீதியான விமர்சனத்தையும் செயற்திறனுடன் செயற்படக் கூடிய சூழலையும் மக்களுக்கு உருவாக்கிக் கொடுக்கக்கூடிய வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

தந்தை செல்வா தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடினார் அந்தப் போராட்டத்தின் தோல்வி நிலையிலேயே தமிழ் மக்களை இறைவன்தான் காப்பாற்ற வேண்டும் என்று சொன்னார். ஆனால் போராட்டக் கொள்கைகளை அவர் கைவிடவில்லை. ஆனால் ஒருவிடயம் தந்தை செல்வாவின் போராட்டக் கொள்கைகள் அகிம்சையில் பயனளிக்கவில்லை என்றுதான் ஆயுதப்போராட்டத்தினை இளைஞர்கள் ஆரம்பித்தனர். ஆனால் ஒரு விடயம், போராட்ட வடிவங்கள் மாறலாம் ஆனால் போராட்டக் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கவில்லை. தமிழ் மக்களுடைய அபிலாசைகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுக்கு சமஸ்டி கிடைக்க வேண்டும் என்பதே. இவ்வளவு காலத்திற்கு அவர்களுக்குத் தீர்வுகள் கிடைக்காது, அதனை மறுத்து செயற்பட்டு வருவதானது தமிழ் மக்கள் செய்த தியாகத்துக்கும் அவர்கள் தம்மைக்காப்பாற்றுவதற்கு தலைவர்களாகத் தேர்ந்தெடுத்தவர்கள் செய்த துரோகமே தவிர வேறு ஒன்றுமில்லை. ஆதனால்தான் மக்கள் போராட்டங்களை தங்கள் கைகளில் எடுத்து வீதிகளில் இறங்கியிருக்கிறார்கள். எனவே மாற்றுத்தலைமைகள் மக்களுடைய வழியில் தங்கள் கொள்கைகளுடம் செல்லும் மக்கள் நலன் சார்ந்ததாகவே இருக்கும் என்பதை நிரூபிப்பார்களாக இருந்தால் நிச்சயம் இத் தேர்தலில் வெற்றி பெறுவார்கள்.

எனவே மாற்றுத் தலைமையுடனான சிந்தனை என்பது தமிழ் மக்களின் அபிலாசைகளையும் உரிமைகளையும் வென்றெடுப்பதற்காக தொடர்ந்து போராடிச் செல்வதற்கு உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு பயன்படுத்துவதன் மூலம் தான் இந்தக் கிராமியத் தேர்தல்கள் மூலம் இழந்த பொருளாதாரங்களை மீட்டெடுப்பதற்கான திட்டங்களையும், முன்மொழிவுகளையும், தங்களுடைய செயற்பாடுகளின் மூலம் தங்கள் தீர்மானங்கள் சரியானது என்று முடிவெடுப்பதற்கான ஒரு சர்வதேச அங்கீகாரத்திற்கான வெளிப்பாடுகளையும் இந்த மாற்றுத் தலைமைகளுக்கு வழங்குவதன் மூலமே இதற்கான தீர்வைக் கண்டுகொள்ள முடியும்.

நன்றி

சுபீட்சம்

ஜனவரி 2, 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழ்க் கூத்துக்கலையை எவ்வாறு தொழில்முறைக் கலையாக்குவது?

-கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா.-

உல்லாசப் பயணத்துறையுடன் இணைப்பதன் மூலம் தமிழ் கூத்துக்கலையை ஒரு தொழில் முறைக் கலையாக வளர்த்தெடுக்க முடியும். அதற்கான வசதியும் கிழக்கில் உண்டு என்கிறார் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தின் முன்னாள் உதவிக்கல்விப்பணிப்பாளரும் தற்போதைய மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை விரிவுரையாளருமான இலங்கை கல்வியியலாளர் சேவையைச் சேர்ந்த வருமான கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா.

வீரகேசரி வார இதழுக்கு அவர் வழங்கிய நேர்காணலிலேயே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் தொடர்ந்து வழங்கிய விபரங்கள் இங்கு தொகுத்து தரப்பட்டுள்ளது.

**கேள்வி: தமிழ் கூத்துக்கலை சமூக அசைவியக்கம் காரணமாக எத்தகைய விளைவுகளை எதிர் கொண்டுள்ளதாகக் கருதுகிறீர்கள்?**

பதில்: உண்மையில் இன்றைய கலைப்பண்பாட்டுத் தேடலில் குறிப்பாகச் சொல்லப் போனால் சமூக அசைவியக்கம் காரணமாகவும் இயற்கை அனர்த்தங்கள் காரணமாகவும் கடந்த முப்பது ஆண்டுகளில் தொடர்ச்சியாக இடம்பெற்ற போர், குறிப்பாக 1983 இல் இனக்கலவரம், விடுதலை, ஸ்தாபனங்களுக்கிடையிலான முரண்பாடுகளை 1986, 1987களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள், 1990 இல் ஏற்பட்ட இலங்கை இராணுவ நடவடிக்கைகள், அதன் பின் நிலவிய தொடர்ச்சியான யுத்த சூழல் 2006 - 2011 வெள்ளப்பெருக்குகள் போன்ற காரணங்கள் மூலம் பின்வரும் விளைவுகள் ஏற்பட்டுள்ளன.

தொடர்ச்சியான போர் அச்சம் காரணமாக பாரம்பரியத் தொழில்களைக் கைவிட்டமை, வெளிநாடுகளுக்கு மக்கள் புலம்பெயர்ந்தமை, கிராமத்தில் இருந்து நகரம் நோக்கிப் புலம்பெயர்ந்தமை, இளம் தலைமுறையினர் தொடர்ச்சியாக கல்வியில் நாட்டம் செலுத்தியமை, பெற்றகல்விக்கு ஏற்ற தொழில் நாடியதாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பு கருதியும் அரசு தொழில் நாடியமை இதனால் புதியதொரு மத்தியவர்க்கம் உருவாகியமை, உழைப்பும், தொடர் கல்வியும் கலைகளைப் பேணுவதில் உள்ள நாட்டத்தைக் குறைத்தமை, போர்ச்சூழல் காரணமாக வடக்கு, கிழகில் ஏற்பட்ட போக்குவரத்துத் தடைகள் நேரக்கட்டுப்பாடுகள், ஊடரங்குகள் போன்ற தொடர்ச்சியாக பொழுதுபோக்கு அம்சங்களை இல்லாமல் செய்தமை, போர்ச்சூழலும் புலம்பெயர்வும் மாற்று நாகரிகச் சிந்தனையை தோற்றுவித்தமை, இயற்கை அனர்த்தம் குறிப்பாக ஆழிப்பேரலையின் பின் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றம் உள்ளிட்டவைகள் இவை எமது கலையிலும் கலை வாழ்விலும் தாக்கத்தை செலுத்தியுள்ளன.

**கேள்வி: கலை பண்பாட்டு தேடலில் கூத்துக்கலை நவீனத்துவத்தின் பால் எத்தகைய சவாலை எதிர்நோக்குகிறது?**

**பதில்:** இன்று சர்வதேச மட்டத்தில் ஏற்பட்ட கொள்கை வகுப்புக்கள், வல்லரசுக்கிடையிலான ஆதிக்கப் போட்டிகள், சமவுடமைப் பொருளாதாரக் கொள்கை தோல்வி கண்டு முதலாளித்துவம் நோக்கிய நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டமை.

இதனால் பாரிய முதலீடுகளை மேற்கொள்வதாகக் காட்டி வளர்முக நாடுகளின் பொருளாதாரம் ஏப்பம் விடப்படுகிறது. வல்லரசுகளின் உலகமயமாதல் சிந்தனை மிலேனியத்தில் உற்பத்தியாகிறது. ஒரே மொழி, ஒரே மதம், ஒரே பண்பாடு ஒரே நாடு என்ற சிந்தனைப்போக்கின் வீரியம் பொருளாதார உற்பத்தி முறைகளிலும் தாக்கத்தை செலுத்தியது. தொழில்நுட்பப்போட்டி நிலை உருவாக்கப்படுகிறது.

இத்தொழில்நுட்பப் போட்டி நிலை காரணமாக கணனி யுகத்தின் வளர்ச்சி, சர்வதேச வலைப் பின்னல், மிலேனியயுக எழுச்சி இலங்கை முதலாளித்துவ வர்க்கத்தை மாத்திரமல்ல மத்திய தர வர்க்கத்தை மத்திய தரவர்க்கத்திடமும் கிராமத்தில் இளந்தலைமுறையினரிடமும் செல்வாக்குச் செலுத்தியிருக்கிறது. இதன் தாக்கத்தை எமது தென்னிந்தியச் சினிமாத்துறையில் காண முடிகிறது.

துரதிஷ்டவசமாக இலங்கைத் தமிழ் மக்களிடம் சினிமா ரசனை வளர்ந்த அளவிற்கு சினிமா தயாரிக்கும் சிந்தனை வளரவில்லை. ஆயினும் குறுந்திரை முயற்சிகள் முளைவிட்டு நிற்கின்றன. மேலும் சினிமாத்துறையின் துல்லியமான காட்சியமைப்புக்கள், பொய்மையை மெய்மையாகக் காட்டும் காட்சிகள் பிரமிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வைக்கும் காட்சி அமைப்புக்கள், முப்பரிமாண சினிமாக்களைத் தயாரிக்கும் பரிசோதனை முயற்சிகள், டிஜிடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இசையமைத்தல், புகைப்படம் எடுத்தல் என நவீன தொழில் நுட்ப ஆதிக்கம் தொலைக்காட்சி, வானொலி, சினிமாத்துறை என்பவற்றில் செல்வாக்கு செலுத்துகிறது.

இந்த வன்மைக் கவர்ச்சிக்கு முன்னால் எமது கூத்துக்கலையை எவ்வாறு சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு செல்லலாம். எமது மக்களின் இரசனைக்குரிய கலையாக மீளளிப்புச் செய்யலாம் என்பன இன்று நம் முன்னுள்ள சவால்களாகும்.

**கேள்வி: பாரம்பரிய அரங்கை அதன் பாரம்பரிய நிலையில் பேணுவது சாத்தியமற்றது என்னும் கருத்தியல் புலப்படுகிறது. அதைச் சார்த்தியமுடையதாக்க என்ன செய்ய வேண்டும்?**

பதில்: ஆம், இத்தகைய நிலைக்கு இந்தியா வைப்போல் தொழில் முறைக் கலைஞர்கள் இங்கு இல்லாதிருப்பது ஒரு காரணமாகும். எனவே இதனை ஒரு தொழில் முறைக் கலையாக மாற்றவேண்டும்.

அவ்வாறு மாற்றுவது மூலம் இக்கலையை பாதுகாக்க முடிவதோடு தொழில் முறைக் கலைஞர்கள் பொருளாதாரத்தை ஈட்டிக்கொள்வதோடு இக்கலை வளர்ப்புக்கு தேவையான பொருளாதார வளத்தை பெருக்கிக்கொள்ளமுடியும்.

எடுத்துக்காட்டாக இம்முயற்சியை வலுப்படுத்த இலங்கை சுதந்திர வர்த்தக, மையம், உல்லாசப்பயணத்துறை, இவற்றோடு இக்கலைத்துறை தொழில் முறையாக இணைக்கப்படுவதன் மூலம் இக்கலைத்துறையையும் இக்கலைத்துறைக்கான தொழில் துறையையும் இக்கலைத்துறைக்கான தொழில் முறையையும் ஸ்தாபிக்கமுடியும்.

இதன் மூலம் எமது பாரம்பரிய கலை அழகியல் உணர்வு சர்வதேச மட்டத்தை சென்றடையக்கூடிய வாய்ப்பும் வசதியும் ஏற்படும்.

இதன் காரணமாக எமது கலைஞர்கள் தொழில் துறையாக தேசிய ரீதியாகவும் கௌரவத்தை பெறக்கூடிய வாய்ப்பும் வசதியும் ஏற்படும். இதன் மூலம் உள்நாட்டுப் பொருளாதாரத்தை வளர்ப்பதோடு வெளிநாட்டு பொருளாதார முதலீட்டிற்கான ஒரு துறையாகவும் இத்துறையை மாற்ற முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எனவே, இக்கலையை கிழக்கில் ஒரு தொழில் முறைக்கலையாக மாற்ற வேண்டிய கடப்பாடு உள்ளது போல் தொழில் முறைக்கலைஞர்கள் இங்கு இல்லாதிருப்பது சிக்கலான ஒரு காரணமாகும்.

எனவே இதனை ஒரு தொழில முறைக்கலையாக மாற்ற வேண்டும். அவ்வாறு மாற்றுவதன் மூலம் இக்கலையை பாதுகாக்க முடிவதோடு தொழில் முறைக் கலைஞர்கள் பொருளாதாரத்தை ஈட்டிக் கொள்வதோடு இக்கலை வளர்ப்புக்கு தேவையான பொருளாதார வளத்தை பெருக்கிக்கொள்ள முடியும். எடுத்துக்காட்டாக இம்முயற்சியை வலுப்படுத்த இலங்கை சுதந்திர வர்த்தக மையம், உல்லாசப்பயணத்துறை, இவற்றோடு இக்கலைத்துறை தொழில் முறையாக இணைக்கப்படுதல் மூலம் இக்கலைத்துறையையும் இக் கலைத்துறைக்கான தொழில்துறையையும் ஸ்தாபிக்கமுடியும் இதன் மூலம் எமது பாரம்பரிய கலை அழகியல் உணர்வு சர்வதேச மட்டத்தை சென்றடையக்கூடிய வாய்ப்பும் வசதியும் ஏற்படும்.

இதன் காரணமாக எமது கலைஞர்கள் தொழில் துறையாக இதனை பேணமுடிவதோடு சர்வதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் கௌரவத்தை பெறக்கூடிய வாய்ப்பும் வசதியும் ஏற்படும் இதன் மூலம் உள்நாட்டு பொருளாதாரத்தை வளர்ப்பதோடு வெளிநாட்டு பொருளாதார முதலீட்டிற்கான ஒரு துறையாகவும் இத்துறையை மாற்ற முடியும். எனவே இக்கலையை கிழக்கில் ஒரு தொழில் முறைக்கலையாக மாற்ற வேண்டிய கடப்பாடு நம்மவர்க்குண்டு.

எனவே அம் முயற்சிகள் கைகூடுவது இத்துறை வளர்ச்சிக்கு பெரிதும் பயனளிக்குமென நம்பலாம்.

நன்றி

வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மனிதம் மானுடத்தை மதிக்கட்டும்

–கலாநிதி எம்பி.ரவிச்சந்திரா–

மதங்கள் மனிதர்களை மனிதர்களாக வாழ வைப்பதற்கே உருவெடுத்தன. எல்லா மதங்களும் மனிதனை நேசிக்கச் சொல்கின்றன. அன்பை வலியுறுத்துகின்றன மன்னிக்கும் படி கோருகின்றன. மனிதம் மானுடத்தை மதிக்கட்டும் என்று மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர், கல்வியலாளர், கலாநிதி எம்பி.ரவிச்சந்திரா தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறில் மரித்த உயிர்களுக்காக என்ற தொனிப்பொருளில் அகில இலங்கை மக்கள் செயல் கழகத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற கிழக்கில் இன, அத, அரசியல், பிரதேச வேறுபாடுகளைத்தாண்டிய பொது இரங்கல் நிகழ்வில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,

நாம் சொல்லொண்ணாத் துயரங்களையும், இழப்புக்களையுயும் விலைமதிப்பற்ற உயிர்களையும் பலி கொடுத்துள்ள இந்த நாட்டில் மீண்டும் ஒரு துயரினைச் சந்தித்துள்ளோம். இன மத பேதமற்ற நாடு என்ற அரசியல் கோட்பாடும் பன்முகச்சிந்தனையும் உள்ள இந்த நாட்டில் சட்டங்களுக்கு விரோதமான முறையில் இடம்பெறும் சமூக விரோத, அரசியல் விரோத, மத விரோத, இன விரோத, பிரதேச விரோத செயற்பாடுகளின் மூலம் ஒரு சிறு குழுவினர் ஒரு நாட்டின் ஸ்திரத்தன்மையை சீரழிப்பதோடு, அல்லாமல் அப்பாவி மக்களை கொன்றொழிப்பதன் மூலம் சாதிக்க முயல்வதென்ன?

நிலையற்ற இந்த உலகில் வாழும் காலத்தைப் பரஸ்பர புரிதலுடன், மகிழ்ச்சியும், சமாதானமும், விட்டுக் கொடுப்பும் நிறைந்த நிலைப்பாடுகளை மனித நேயமும் மிக்க மனிதத்துவத்தை மதிக்கும்மானிட நேயமுள்ள மனிதர்கள் மனிதர்களாக இருக்க வேண்டிய உலகில், மனிதன் அறிவுள்ள விலங்கு எனற அடிப்படைத் தத்துவத்தில், உறங்கிக்கிடக்கும் விலங்கு உணர்வை முதன்மைப்படுத்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோசங்கள், பிரச்சாரங்கள் மூலம் மானிடம் தனது மனித்ததுவத்தை இன்று உலகெங்கிலும் இழந்து நிற்கிறது.

மனிதனை மனிதனாக வாழ வைக்க உலகம் தோன்றிய காலம்முதல் மனித இனம் சிந்திக்கும் ஆற்றலின் வெளிப்பாடுகளில் முகிழ்த்த கருத்தாடல்களின் மூலம் கிளம்பிய மாற்றுக் கருத்தாடல்களும் மனிதத்துவத்தை நிலைபேறுடையதாக்க முயற்சித்துள்ளன. இந்த வகையில் இயற்கை நெறியில் சமூக விழுமியங்களை இழந்த மானிட சமூகத்தை நெறிப்படுத்த அறக்கருத்துக்கள், அறக் கோட்பாடுகள் அன்றைய கால சிந்தனைவாதிகளால் முன்வைக்கப்பட்டன.

அந்தப் போக்குகளில் இருந்து மனிதம் விலகிய போது பக்திப்பாரம்பரிய கோட்பாடுகளும், இறை கருத்துக்களும் சமூகத்தை நெறிப்படுத்த முளைத்தன. இந்த முனைப்புக்கள் இன்று மானுடத்துவத்தில் வெறியாக, வாதமாக பரிணமித்ததன் விளைவு சமூக நன்னடத்தை பிறழ்வடைந்துள்ளது.

மதங்கள் மனிதர்களை மனிதர்களாக வாழ வைப்பதற்கே உருவெடுத்தன. எல்லா மதங்களும் மனிதனை நேசிக்கச் சொல்கின்றன. அன்பை வலியுறுத்துகின்றன மன்னிக்கும் படி கோருகின்றன. உண்மை, அன்பு, மன்னிப்பு, தூய்மையான சகோதரத்துவ வாழ்வை உயிர்களிடத்தில் அன்பு காட்டும் வாழ்வை ஜீவ சிந்தனையாகக் கொண்டு வாழவின் ஆதார சுருதியாக முன்னெடுக்கும்படி வலியுறுத்துகின்றன.

நிறைந்த சிந்தனைகள், நிறைந்த இந்த உலகில் நல்ல தூய சிந்தனைகளை முன்நிறுத்துவோம். அதன் வழி பயணிப்போம். அன்பையும் அறத்தையும் பாதுகாப்போம். கொல்லாமையை வலியுறுத்தும் மதங்களைக் கொண்ட இந் நாட்டில் கொல்லாமையை நிலைநிறுத்த இந்தச் சந்தர்ப்பத்தில் உறுதிபூணுவோம்.

இழந்தவை இழந்தவைதான் அதற்கான நியாயங்கள் கிடைக்கப்பெற வேண்டும். எப்போதும் மறக்காமல் இருப்பது அன்பு அல்ல. என்ன நடந்தாலும் வெறுக்காமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இருப்பதே உண்மையான அன்பு. அன்பு எங்கே அதிகம் இருக்கிறதோ அங்கே சமாதானம் அதிகமாக இருக்கும். இதைத் தெரிந்து கொண்டால் வாழ்வில் பிரிவு இருக்காது. எனவே அன்பின் வழிநின்று செயற்படுவோம்.

இந்த வகையில் கிழக்கின், இன, மத, அரசியல், பிரதேச, வேறுபாடுகளைத் தாண்டிய வகையில் மனிதம் என்ற மானிடத்துவத்தை நமக்கும் வளர்ப்போம். நாம் மனிதர்கள் புத்தியுள்ள மனிதர்கள், பக்தியுள்ள மனிதர்கள், பண்புள்ள மனிதர்களாக வாழ்வோம்.

இத்தகைய கொடூரங்கள், அழிவுகள், இனியும் நிகழாதபடி மனித உரிமைகளை பாதுகாக்க இலங்கை அரசும், சர்வதேசமும் எமக்குத் துணைபுரிய வேண்டும். எமது சிந்தனைகளும், எமது எண்ணங்களும், எமது கோரிக்கைகளும் இவையே.

மனிதர்கள் நாம் சுதந்திரத்தையும், எமது இறைமையையும் நாமே பாதுகாப்போம். எமது எதிர்பாராப் பிரிவுகளின் ஈடு இணையற்ற இழப்புகளை உணர்வோடு பகிர்ந்து இதய பூர்வ அஞ்சலியாய் அவர்களுக்கு செலுத்தும் காணிக்கையாக இறையாசியில் தூய்மையானதொரு சமாதானத்தை அஞ்சலியாய் வேண்டி நிற்போம்.

அகில இலங்கை மக்கள் செயல் கழகத்தின் ஒழுங்கமைப்பில் கடந்த உயிர்த்த ஞாயிறில் மரித்த உயிர்களுக்கான இரங்கல் நிகழ்வு மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மத பெரியார்கள் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் எம்.தயாபரன், மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளர், மட்டக்களப்பு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மட்டக்களப்பு மாநகர முதல்வர், பாராளுமன்ற உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள், மாநகர தீயணைப்பு படையினர், மாவட்ட மகளிர் அமைப்புகள் என பலர் பங்குபற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் செயல் கழகத்தின் வரவேற்புரையை கணேசானந்த ரெட்ணம் சுதர்சன் நிகழ்த்த இரங்கல் உரையை கலாநிதி எம்.பி.ரவிச்சந்திரா வழங்கினார்.

தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களும் மாநகர முதல்வரும் சமூக ஆர்வலர்களும் மத குருமார்களும் உரை நிகழ்த்த இறுதியில் மெழுகுவர்த்தி தீபங்கள் ஏற்றி மலரஞ்சலி அனைவராலும் செலுத்தப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விரைந்து செயற்பட்ட அனைவருக்கும் கழகத்தின் உறுப்பினர் விஜயதர்சன் நன்றிகளைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இன மத பிரதேச அரசியல் வேறுபாடுகள் இன்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டமை விசேட அம்சம் ஆகும்.

நன்றி

சுபீட்சம், battinews.com
மே 1, 2019

வீரகேசரி
மே 4, 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மொழி கொமினிகேசன் | 0777 444 660
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org